வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 181 | பக்கங்கள் : 20



04
யாழ்.மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கும் பணி ஆரம்பம்!



08
21வது அரசியலமைப்பு திருத்தவரைவின் போதாமைகள்



10
கோட்டாவின் நிறைவேற்று அதிகாரத்தை கண்டறிய முனைகிறது நீதித்துறை!



18
தனியார் பஸ் சேவைகளில் நாளை முதல் மட்டுப்பாடு!

# 21ஆவது திருத்தம் நிறைவேற மக்கள் ஒத்துழைக்கவேண்டும்



## நீதியமைச்சர் விஜேதாஸ கோரிக்கை

கொழும்பு, ஜூன். 05

**21 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை நீக்க சகல மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கேட்டுக் கொண்டுள்ளார்.**

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து சிவில் அமைப்புகளுக்கு எடுத்துரைத்த நீதி அமைச்சர், புதிய அரசியலமைப்பு விரைவில் உருவாக்கப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

அதற்கு முன்னர் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்த 21 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என விஜேதாஸ குறிப்பிட்டார்.

19

## நாளை முதல் 12 ஆம் திகதி வரை மின்வெட்டுக்கு அனுமதி!

கொழும்பு, ஜூன். 05

எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நாட்டில் மின்வெட்டினை மேற்கொள்ள தேசிய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, ஜூன் 6 முதல் 10 வரை 2 மணித்தியாலங்கள் 15 நிமிடங்களும் மற்றும் ஜூன் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் 1 மணி நேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் ஒன்றரை வயது குழந்தை நீர்ப்பாசனக் கால்வாயில் விழுந்து மரணம்!

கிளிநொச்சி, ஜூன். 05

கிளிநொச்சி மருதநகர் விவசாயத்துக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளும் நீர்ப்பாசன கால்வாயில் ஒன்றரை வயது நிசாந்தன் சபீசன் என்ற சிறுவன் விழுந்து பலியாகியுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை 6.00 மணியளவில் வீட்டின் அருகில் உள்ள நீர்ப் பாசன கால்வாயில் விழுந்த சிறுவன் சம்பவ இடத்தில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீரில் இழுத்துச் சென்ற பின்னர் உயிரிழந்த நிலையில் அயலவர்களினால் உடல் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்திய சாலையில் கூற்று விசாரணைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ)

## செவ்வாய்க்கிழமை தொடக்கம் லிட்ரோ எரிவாயு விநியோகம்

கொழும்பு, ஜூன். 05

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முதல் சமையல் எரிவாயுவை விநியோகிக்க முடியும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

2,500 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் மாதிரிகள் இன்று பரிசோதனைக்கு

19

## நல்லூரில் விபத்து; பெண் துறவி பலி!

யாழ்ப்பாணம், ஜூன்.05

நல்லூர் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் சிக்கிய இந்து மதப் பெண் துறவியான செல்வி ஓங்கார ரூபி (வயது 70) சண்முகநாதன் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம்,

பருத்தித்துறை பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர் திடீரென நல்லூர் பிரதேச செயலகத்துக்குச் செல்லும் வீதிக்கு மோட்டார் சைக்கிளை திரும்பியபோது பின்னால் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த ஓங்கார ரூபி வேலன் சுவாமிகளின் ஆதீனத்தில் இருந்தவர் என்று தெரியவந்துள்ளது.

அவரின் மரணம் தொடர்பிலான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

## 65,000 மெற்றிக் தொன் யூரியா வழங்க இந்திய அரசு இணக்கம்

கொழும்பு, ஜூன். 05

இலங்கையின் கோரிக்கைக்கு அமைய 65,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை வழங்க இந்தியா சாதகமான பதிலை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த யூரியா உரத் தொகுதி விரைவில் இலங்கைக்கு

19

## இரு தரப்பு உறவு பாதிக்கப்பட முன் ரஷ்ய விமானச் சிக்கலுக்கு தீர்வு

### அரசை வலியுறுத்துகிறார் தினேஷ்

கொழும்பு, ஜூன். 05

ரஷ்ய 'ஏரோபுளோட்' விமானம் தொடர்பான பிரச்னைக்கு தீர்வு காண விரைவாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரஷ்ய 'ஏரோபிளோட்' விமானம் ஒன்று இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில்

19



## தமிழக முதல்வர் ஸ்டாலினை சந்தித்தார் மிலிந்த மொறகொட

சென்னை, ஜூன். 05

இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சர் எம்.கே. ஸ்டாலினை சென்னையில் நேற்று சந்தித்து பேசினார்.

இதன்போது தமிழ் நாடு மற்றும் இலங்கை இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருவரும் கலந்

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்காக தீவிரமாக பணியாற்றிய ஊடகங்களில் இரண்டு ஊடகங்கள் முக்கியமானவை. அதில் ஓர் ஊடகத்தின் உரிமையாளரின் சகோதரரே துமிந்த சில்வா.

கொலை வழக்கில் தண்டனைபெற்று உள்ளே இருந்த அவருக்கு ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பில் வெளியே வந்தவர் அவர்.

மீண்டும் அந்த பொதுமன்னிப்பு விவகாரம் இப்போது நீதித்துறையின் பரீட்சைக்களமாக மாறியிருக்கின்றது.

தேர்தல் காலத்தில் கோட்டாபயவின் புகழ்பரப்பிய அந்த ஊடகம், அண்மைக் காலங்களில் மிக தீவிரமாக கோட்டாபயவை விமர்சித்தது.

அதன் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் 'இனந்தெரியாதவர்களின்' தாக்குதலுக்கு உள்ளானதுகூட அவர் அந்த தொலைக்காட்சியில் அரசுக்கு எதிராக செய்த விமர்சனங்கள் தான் என்றுகூட அப்போது பேசப்பட்டது.

ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும், ஜனாதிபதி ஒரு சில மாதங்களிலேயே, மிருசுவில் படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரியான சுனில் ரத்நாயக்காவுக்கு பொதுமன்னிப்பு வழங்கியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆனால், அப்போதோ அல்லது அதற்குப் பின்னரான காலங்களிலோ துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படவில்லை.

இதனாலேயே கடுப்படைந்த அந்த ஊடகம், ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் ஊதித்தள்ளுகின்றது என்ற கருத்து பலரிடமும் இருந்தது.

கடைசியில் துமிந்த சில்வா பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டார். இதற்கு முன்னரும் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே நீதித்துறையை அவமதித்த வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த பொதுபல சேனா அமைப்பின் தலைவர் ஞானசார தேரர் பொதுமன்னிப்பில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது விடுதலை செய்யப்பட்டிருந்ததும் நினைவிருக்கலாம்.

மைத்திரிபால தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு சில மாதங்கள் இருக்கும்போது, பாலியல் வழக்கு ஒன்றில் தண்டனை பெற்ற செல்வந்தர் ஒருவரையும் விடுவித்திருந்தது மற்றுமொரு சர்ச்சையைக் கிளப்பியிருந்தது.

இந்த அனைவரின் விடுதலை தொடர்பாகவும் அதாவது, பொதுமன்னிப்பு தொடர்பாகவும் வழக்குகள் நிலுவையில் இருக்கும் நிலையில், துமிந்த சில்வாவின் வழக்கில் மாத்திரம் இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதுடன், அவரும் கைதுசெய்யப்பட்டு, மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்றார்.

இனி இந்த வழக்கை உதாரணம்காட்டி மற்றையவர்களின் வழக்குகளிலும் இதேதீர்ப்பு வழங்கப்படலாம்.

அதுவல்ல எமக்கு உறுத்தும் விவகாரம். ஞானசாரர், சுனில் ரத்நாயக்க போன்வர்களின் பொதுமன்னிப்புக்கு எதிரான வழக்குகள் நீண்டகாலம் நிலுவையில் இருக்கும்போது, துமிந்த சில்வாவின் வழக்கில் இடைக்கால தீர்ப்பு வெளியானது மாத்திரமல்ல, அந்த வழக்கில் அடுத்த தவணை நான்கு மாதங்களுக்குப் பின்னர் திகதியிடப்பட்டிருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்ற பின்னர், இது போல பல விடயங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நடக்கின்றன.

மே ஒன்பதாம் திகதி காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை தொடர்பாக முன்னாள் அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றது. முக்கிய பிரமுகர்கள் கைது செய்யப்படுகின்றனர். அதாவது, நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியான பாதையில் பயணிப்பதுபோல தோற்றம் காட்டப்படுகின்றது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு நீதித்துறையின் கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. நீதித்துறை இங்கே கம்பீரமாக எழுந்து நிற்கின்றது.

அப்படியே, இனி பொருளாதார நெருக்கடிக்கும் ஒவ்வொரு விடயங்களாக தீர்வுகாணப்பட பல்வேறு தரப்புக்களும் முட்டிமோதலாம்.

ஆக, ரணில் விக்கிரமசிங்கவை ஒரு மீட்பராக சித்தரிக்க எடுக்கப்படும் முயற்சிகளில் அவர் ஒவ்வொன்றாக தேறிவருகின்றார்.

இனி என்ன, ரணில் வெல்லமுடியாத வேட்பாளர் என்று, ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுவேட்பாளருக்கு தேடித்திரிந்த சக்தி, ரணிலையே முன்னிலைப்படுத்தலாம்.

அதிகம் ஏன், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலே பொதுவேட்பாளராகவும் களமிறக்கப்படலாம். அதற்காக செய்யவேண்டியவற்றை ஒவ்வொன்றாக பார்த்துப் பார்த்து இப்போது செய்யத் தொடங்கியிருக்கின்றனர்.

இருபத்தி ஒன்றுக்கும், இனி ஜனாதிபதிக்கு இருக்கும் முழு அதிகாரங்களையும் பிடுங்கிவிடாமலும் பார்த்துக்கொள்ளப்படலாம்.

- ஊர்க்குருவி.

# அரசியல் அமைப்பு பேரவையில் 3 சிறுபான்மையினர் வேண்டும்!

## அரவிந்தகுமார் வலியுறுத்து

கொழும்பு, ஜூன். 05

21ஆவது திருத்த சட்டத்தின் கீழ் அமையவிருக்கும் அரசியல் அமைப்பு பேரவையில் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று உறுப்பினர்கள் உள்ளடக்கப்படவேண்டும் என பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள அவர், அதன் பிரதிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டோருக்கும் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியினால் அரசியல் அமைப்பு பேரவைக்கு ஒருவரை நியமிக்கவேண்டும் என்ற முன்மொழிவு ஏற்கனவே முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அதில் ஜனாதிபதியினால் நான்கு பேரை நியமிக்கும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அமைய பெரும்பான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரையும், வடக்கு-கிழக்கைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதி ஒருவரையும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரையும், முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஒருவரையும் ஜனாதிபதி தெரிவு செய்ய வேண்டும் எனவும், அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார். (அ)



# கதிர்காமத்துக்கான பாத யாத்திரை செல்வச் சந்நிதியிலிருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன். 05

யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமத்துக்கான பாத யாத்திரை தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து நேற்று காலை ஆரம்பமாகியது.

வருடா வருடம் யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை செல்லும் குழுவினர் செல்வச் சந்நிதியான் ஆலயத்தில் தங்கியிருந்து நேற்று காலை தொண்டைமானாறு ஆற்றில் நீராடி வழிபாடு நடத்தி பாத யாத்திரையை ஆரம்பித்தனர்.

முன்னதாக, வலிகாமம் வடக்கு பகுதியில் இருந்து புறப்பட்டவர்கள் கீரிமலை நகுலேஸ்வரம், மாவட்டபுரம் கந்தசுவாமி ஆலயங்களில் வழிபாடு நடத்தி மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பேச்சி அம்மன் ஆலயத்தில் இரவு தங்கியிருந்தனர்.



இவ்வாறு மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பேச்சி அம்மன் ஆலயத்தில் தங்கியிருந்த யாத்திரிகர்களுக்கு உணவு, தேநீர் என்பவற்றை வழங்கியும் நினைவு சால்வைகளை வழங்கியும் ஊர் மக்கள் உபசரித்திருந்தனர்.

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பேச்சி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டினை மேற்கொண்டு நேற்று முன்தினம் காலை 8.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கட்சிகளுக்கிடையே பொது இணக்கம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 05

21ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக கட்சிகளுக்கு இடையில் பொது இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அனைத்து கட்சித் தலைவர்களுக்கிடையிலான கூட்டத்தின்போது இந்த இணக்கம் ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பிரதமரை பதவி நீக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு மட்டுமே இருக்கவேண்டும் என்ற இணக்கமும் எட்டப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி மட்டுமே பாதுகாப்பு அமைச்சுப் பதவியை வகிக்கலாம் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கூறினார். (அ)

# சுமந்திரன் எம்.பி. வீட்டுக்கு பாதுகாப்பு வழங்கிய படைச் சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஜூன். 05

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் வீட்டுக்கு பாதுகாப்பு வழங்கிய இராணுவச் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

கொழும்பில் உள்ள சுமந்திரனின் வீட்டுக்கு பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே இன்று தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சுமந்திரன் எம்.பி.யிடம் வினவியபோது குறித்த சம்பவத்தை உறுதிப்படுத்தினார்.

சுமந்திரன் எம்.பி. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த மே-9 ஏற்பட்ட வன்முறை சம்பவங்களை அடுத்து சகல பாராளுமன்ற உறுப்பினர்கலின் வீடுகளுக்கும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டது.

குறித்த பாதுகாப்பு எனது வீட்டுக்கு தேவையில்லை என நான் மறுத்திருந்தபோதிலும் வீட்டுக்கு அருகே இராணுவ வீரர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வந்தனர்.

அவ்வாறு பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரே தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார் - என்றார். (அ)

# பொருளாதாரச் சீர்குலைவுக்கு மகிந்த, பஸில், கப்ரால் காரணம்

## உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்

கொழும்பு, ஜூன். 05

நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்ததாக குற்றம் சுமத்தி முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் உள்ளிட்ட பேராசிரியர்கள் மூவர் அடங்கிய குழுவொன்றும், ஐக்கிய மக்கள் சக்தியின் புத்திஜீவி அமைப்புக்களும், கட்சியின் சட்டத்தரணிகளும் இணைந்து இவ்வாறு வழக்கு தொடர்ந்துள்ளனர்.

உயர் நீதிமன்றில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் டொலர் கையிருப்பை இல்லாமல் செய்தனர் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், திறைசேரியின் முன்னாள் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர உள்ளிட்ட சிலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பணவீக்க அதிகரிப்பு, அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு, அந்நிய செலாணி பற்றாக்குறை என பல்வேறு விடயங்களின் அடிப்படையில் இவ்வாறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மனுவில் குறிப்பிட்ட சிலர் வேண்டுமென்றே மத்திய வங்கிக்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீண்டும் உயரும் எரிவாயு விலைகள்

கொழும்பு, ஜூன். 05

லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டர்களை அடுத்த வாரமளவில் சந்தைக்கு விநியோகிக்க முடியும் என லாப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையும் அதிகரிக்கக்கூடும் எனவும் அந்த நிறுவனத் தகவல்கள் தெரிவிக்கின்றன .

இதன்படி, 12.5 கிலோ கிராம் லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 6,000 ரூபாவை விட அதிகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது .

இதேவேளை, லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நேற்று விநியோகிக்கப்படவில்லை. எதிர்வரும் செவ்வாய்கிழமை முதல் எரிவாயு விநியோகத்தை மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# கோட்டை ரயில் நிலையம் முன் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன். 05

சமூக வலைத்தளங்கள் ஊடாக ஒன்றிணைந்து போராட்டக்காரர்கள் கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற கோஷத்துடன் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பெரும்பாலானவர்கள் ஒருவரையொருவர் அறிந்திராதவர்கள் என்றும், கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டம் குறித்து ருவிட்டர் மற்றும் பேஸ்புக் பதிவுகள் ஊடாக அறிந்து ஒன்றிணைந்தவர்கள் எனவும் கூறப்பட்டது. (அ)

# ‘யாழ்ப்பாண கல்லூரியை பாதுகாப்போம்’ வட்டுக்கோட்டையில் நேற்று கவனயீர்ப்பு





யாழ்ப்பாணம், ஜூன். 05

யாழ்ப்பாணக் கல்லூரியைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் அக்கல்லூரி பழைய மாணவர்களின் அமைப்பினால் இன்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக, தெல்லிப்பழை வீதியின் இரு மருங்கிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையில் இடம்பெறும் மோசமான யாப்பு மீறல்களைக் கண்டிக்கும் வகையிலும், கல்லூரியின் நிர்வாகத்திலே ஆளுநர் சபையின் தலைவர் மேற்கொண்டு வரும் முறையற்ற தலையீடுகளை எதிர்க்கும் வகையிலும், யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபைக்கு எதிராக ஆளுநர் சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விலக்கிக் கொள்ளப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன் வைத்தும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# 190 கிலோ கேரள கஞ்சா கிளிநொச்சியில் மீட்பு!

## மன்னாரை சேர்ந்த ஒருவர் கைது



கிளிநொச்சி, ஜூன். 05

கிளிநொச்சி விவேகநந்தா நகர் பகுதியில் 190 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த சந்தேகநபர் மேற் குறித்த பகுதியில் வாடகைக்கு வீடு பெற்று வசித்து வந்துள்ளதாகவும், வியாபார நோக்கத்துக்காகவே மன்னாரிலிருந்து வந்து அங்கு தங்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா சுமார் 190 கிலோ எடையுடையது எனவும், அதன் இலங்கை பெறுமதி 5 கோடி ரூபாய் மதிக்கத்தக்கது எனவும் கூறப்படுகிறது.

விசாரணை மேற்கொண்டு வரும் விசேட அதிரடிப்படையினர் சந்தேகநபரையும், கஞ்சா பொதிகளையும், சொகுசுக் காரினையும் கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

# மருந்துகளுடன் சீன விமானம் கொழும்புக்கு வந்து சேர்ந்தது

கொழும்பு, ஜூன். 05

சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட சுமார் 28 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இதில் 14 அத்தியாவசிய மருந்துகள் உட்பட மருந்து மருந்துகள் மற்றும் உபகரணங்களின் சரக்குகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன மற்றும் பல முக்கிய விருந்தினர்கள் விமான நிலையத்தில் இந்தப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள சென்றிருந்தனர்.

இதேவேளை, சீன அரசாங்கம் மற்றும் அந்த நாட்டில் இயங்கிவரும் பல்வேறு பௌத்த அறக்கட்டளைகள் உட்பட பல்வேறு சமூக அமைப்புகளினால் இந்த மருந்துகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டார். (அ)

# கொழும்புக்கான வர்த்தக விமான சேவையை இடைநிறுத்தியது ரஷ்யாவின் ஏரோபுளோட்!

கொழும்பு, ஜூன். 05

எயார்பஸ் ஏ-330 விமானம் கட்டுநாயக்கவில் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து, ரஷ்ய விமான நிறுவனமான ஏரோபுளோட் இலங்கைக்கான விமானங்களை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்துள்ளது.

தடையில்லாமல் விமான சேவை இடம்பெறும் என்பதில் நம்பிக்கை இல்லை என்பதனால் இலங்கைக்கான சேவைகளையும் ரிக்கெட் விற்பனையையும் இடை நிறுத்துவதாகவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி இலங்கையில் விமான சேவையை ஆரம்பித்த ரஷ்யாவின் ஏரோபுளோட் விமான நிறுவனம் எட்டு மாதங்களுக்குப் பின்னர் இலங்கைக்கான விமான சேவைகளை இடைநிறுத்தியுள்ளது.

குத்தகை நிறுவனத்தில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக கடந்த 2ஆம் திகதி, ரஷ்ய விமானம் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு 16 ஆம் திகதி வரை அமுலில் உள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சு மொஸ்கோவுக்கான இலங்கைத் தூதுவர் ஜனிதா அபேவிக்ரம லியனகேவை அழைத்து விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டமைக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# டொலர் அனுப்பாததால் ஒருபோதும் ராஜபக்ஷக்களுக்கு பாதிப்பு இல்லை

## சுட்டிக்காட்டுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூன். 05

**வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு டொலர் அனுப்புவதை தவிர்ப்பதன் மூலம் ஒருபோதும் ராஜபக்ஷர்கள் பாதிக்கப்பட போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

மாறாக இந்த நடவடிக்கையினால் சாதாரண நடுத்தர மக்களே பாதிக்கப்படுவார்கள் என்பதால் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வங்கிக் கட்டமைப்பின் ஊடாக நாட் டுக்கு டொலர் அனுப்பவேண் டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலைக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள ஏன் அவதானம் செலுத்தவில்லை என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உக்ரைன் - ரஷ்யா மோதலை தொடர்ந்து பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எரிபொருள் கொள்முதலை தவிர்த்து வருகின்ற போதும் ஆசிய நாடுகள் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்வதாகவும் உதய கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

எனவே சர்வதேச உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அரசமைப்பு சார்ந்த ஒருசில விடயங்களை மறுசீரமைக்க வேண்டும் என்றும் உதய கம்மன்பில குறிப்பிட்டார். (அ)



# ரயிலில் மோதுண்டு இரு யானைகள் பலி

கொழும்பு, ஜூன். 05

கொழும்பில் இருந்து திருகோணமலை நோக்கிக் கோதுமை மாவை ஏற்றிச் சென்ற ரயிலில் மோதுண்டு இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன எனவும் மற்றுமொரு யானை காயமடைந்துள்ளது என்றும் கல்லோயா பொலிஸார் தெரிவித்தனர்.

தலபத்கந்த ரயில் நிலையத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காட்டு யானையால் ஏற்பட்ட விபத்தினால் ரயில் தடம் புரண்டதுடன் ரயில் சேவையும் பாதிக்கப்பட்டது.

இந்த விபத்தில் 4 வயது யானையும் 1 வயது குட்டி யானையும் உயிரிழந்துள்ளதுடன் 15 வயதுடைய மற்றுமொரு யானை படுகாயமடைந்துள்ளதாக கவுடுல்லா பூங்கா வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹூருலு சுற்றுசூழல் பூங்காவில் சுற்றித் திரியும் ஏராளமான காட்டு யானைகள், கல்லோயா காட்டில் இருந்து குடிதண்ணீருக்காக தலபத்கந்த பகுதிக்கு வழமையாக வருகின்றன.

காட்டுயானைகள் தொடர்ச்சியாக ரயில் பாதையை கடக்கின்றன என்ற விசேட பலகைகள் வழமையாக வைக்கப்பட்டுள்ளபோதிலும் ரயில் சாரதிகள் வேக வரம்பை மீறி பயணிப்பதால் யானைகள் ஆபத்தில் சிக்குவதாக கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (அ)

# முதலாம் தவணை 2ஆம் கட்டம் நாளை திங்கட்கிழமை ஆரம்பம்!

கொழும்பு, ஜூன். 05

அனைத்து அரச பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் கடந்த 20 மாதம் ஆம் திகதி நிறைவடைந்தன.

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் நாளை திங்கட்கிழமை முதல் ஜூலை 8 வரை இடம்பெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# பாதிப்பு ஏற்படாத வகையில் ஓட்டோக்களுக்கு எரிபொருள்

கொழும்பு, ஜூன். 05

ஓட்டோக்களுக்கான எரிபொருள் விநியோகத்தை எதிர்காலத்தில் பிரச்னை ஏற்படாத வகையில் தொடர்ந்தும் பேணுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஓட்டோ சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் நாட்டுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு மாதாந்தம் 500 மில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார் .

எனவே, நாடு எதிர்நோக்கும் நெருக்கடியை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் ஓட்டோ தொழிற்துறையை பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடதக்கது . (அ)

# யாழ்.மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கும் பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன். 05

யாழ். மாவட்டத்தில் உள்ள 78 ஆயிரத்து 442 சமுர்த்திப் பயனாளிகளுக்கு அரசாங்கத்தின் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் வங்கிகளில் வைப்பிலிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமுர்த்தி பயனாளிகளுக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை



வழங்கும் அதே நேரம் காத்திருப்போர் பட்டியலில் உள்ள 27 ஆயிரத்து 978 பேருக்கு அரசாங்கத்தின் 5ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் 1-2 நபர்களை கொண்ட குடும்பத்துக்கு 5ஆயிரம் ரூபாவும், மூன்று நபர்களை கொண்ட குடும்பத்துக்கு 6400 ரூபாவும், நான்குக்கும் மேற்பட்ட நபர்களை கொண்ட குடும்பங்களுக்கு 7500 ரூபாவாக சமூர்த்திக் கொடுப்பனவுடன் வழங்கப்படவுள்ளது.

அதேநேரம், யாழ் மாவட்டத்தில் சுமார் 6 ஆயிரம் வயது முதிர்ந்தவர்கள் பட்டியலில் காணப்படும் நிலையில் அவர்களுக்கும் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் எரிவாயு விநியோகத்தை முறையாக மேற்கொள்வதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தளவிலேயே கிடைக்கப் பெறுகின்றன.

ஆகவே கிடைக்கப் பெறுகின்ற எரிவாயு சிலிண்டர்களை தேவையின் அடிப்படையில் பகிரந்தளிப்பதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியம் - என்றார். (அ)

# பெருந்தோட்ட பகுதியிலுள்ள தரிசு நிலங்களில் விவசாயத்தை ஆரம்பிக்க ஜனாதிபதி பணிப்பு!

கொழும்பு, ஜூன். 05

பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்துப் பயன்படுத்தப் படாத நிலங்களைக் கண்டறிந்து, உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கான துரித வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.



பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான 9,000 ஹெக்ரேயர்களுக்கும் அதிகமான பயிரிடப்படாத நிலங்கள் உள்ளன.

23 கம்பனிகளுக்குச் சொந்தமான அந்த தோட்டங்களில் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற பயிர்களை இனங்கண்டு, அவற்றை பயிரிடுபவர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பெருந்தோட்டத்துறை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தேயிலை ஏற்றுமதியினால் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி வெளிப்படைத் தன்மையுடன் பேணப்படவேண்டும். அதற்காக தேயிலை ஏலத்தை டொலர்களில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து உடனடியாக ஆராயுமாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

பெருந்தோட்டத் துறையில் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக எரிபொருளை வழங்கும் போது முறையான வேலைத்திட்டமொன்றின் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அமைச்சு அல்லது பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு நியமிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து எரிபொருளை விநியோகிப்பதற்கு முன்னுரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. (அ)

# சிகிச்சை பலனின்றி நோயாளி மரணம் வைத்தியர் மீது உறவினர்கள் தாக்குதல்

கொழும்பு, ஜூன். 05

பதுளை பொது வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவர் தாக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளை பொது வைத்தியசாலையில் 15 ஆம் இலக்க நோயாளர் விடுதியில் கடமையாற்றிய வைத்தியர் ஒருவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர் ஒருவரின் உறவினர்களால் தாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

71 வயதான நோயாளி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமையை அடுத்து, அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக 3 பேர் பதுளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், வைத்தியரை தாக்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பதுளை வைத்தியசாலையின் வைத்தியர்கள் வைத்தியசாலை வளாகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
05.06.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## பசில் அணியின் அரசியல்?

இன்றைய சூழலில் தென்னிலங்கை அரசியலில் அதிகம் உற்று நோக்கப்படும் அணி - பசில் தலைமையில் இயங்குவதாக கூறப்படும் அணியாகும். 21ஆவது திருத்தச்சட்டத்தில், 19ஆவது திருத்தச்சட்டத்தில் வலியுறுப்பட்டிருக்கும் இரட்டை குடியுரிமை விவகாரம் மீளவும் உள்வாங்கப்படுமாக இருந்தால், அதனை தடுக்கும் முயற்சியில் பசில் அணியினர் ஈடுபடுவார்களென்றே, பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது. பசில் அணியென்று ஒன்று இருக்கின்றதா?

2015 தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்விடைந்தபோது, பெருமளவிற்கு மெதமுல்ல ராஜபக்ஷக்களின் அரசியல் ஆட்டம் முடிந்துவிட்டதான தோற்றமே தெரிந்தது. ஆனால், பசில் ராஜபக்ஷ சிறிலங்கா பொதுஜன பெரமுன என்னும் அறிமுகமில்லாத கட்சியொன்றின் மூலம், மீளவும் ராஜபக்ஷக்களின் அரசியல் சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பியதாக, பொதுஜன பெரமுனவிலுள்ள ஓர் அணியினர் இப்போதும் உறுதியாக நம்புகின்றனர். மிகவும் குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கை பெற்றமைக்கு, பசில் ராஜபக்ஷவின் தேர்தல் வியூகங்களே காரணமென்று அவர்கள் நம்புகின்றனர்.

இந்தப் பின்னணியில்தான், இப்போதும் பொதுஜன பெரமுனவிலுள்ள புதிய பாராளுமன்ற உறுப்பினர் பலர் பசில் ராஜபக்ஷவை தங்களின் தலைவராக கருதிக் கொள்கின்றனர். மக்கள் மத்தியில் அறிமுகமில்லாத தாங்கள் வெற்றிபெற்றதற்கு பசில் ராஜபக்ஷவின் கெட்டித்தனங்களே காரணமென்று அவர்கள் நம்புகின்றனர். இவர்களது கண் மூடித்தனமான விசுவாசமே, மறுபுறம் பசிலின் அரசியல் முதலீடாக இருக்கின்றது.

இரட்டை குடியுரிமை விவகாரம் மீளவும் தடைசெய்யப்படுமாக இருந்தால், பசில் தேர்தல் அரசியலிலிருந்து வெளியேறநேரிடும். அதன் பின்னர், பசில் ராஜபக்ஷ ஒரு செல்வாக்குள்ள நபராக பொதுஜன பெரமுனவிற்குள் இருக்க முடியாது. தற்போதைய சூழலில், ராஜபக்ஷ குடும்பத்தில் கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமே அதிகாரத்தில் இருக்கின்றார்.

கோட்டாபயவை பொறுத்தவரையில், அவரது பல திட்டங்கள் படுதோல்வியடைந்திருக்கின்ற நிலையில், கௌரவமாக அரசியலிருந்து வெளியேறுவது தொடர்பில் சிந்திப்பதற்கே அதிக வாய்ப்புண்டு. இந்த நிலையில், 21ஆவது திருத்தச்சட்டத்தில் நியாயபூர்வமான சில விடயங்கள் இடம்பெறவேண்டுமென்று அவர் உண்மையிலேயே நினைக்கவும் கூடும்.

ஆனால் ஜனாதிபதியால், தான் நினைப்பதை செய்ய முடியுமா - அதற்கு பசில் அணி அனுமதிக்குமா என்னும் கேள்வியெழுக்கின்றது. பசிலை பொறுத்தவரையில், அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியாவிட்டாலும் கணிசமான ஆசனங்களை பெற்றால், எதிர்க்கட்சி ஆசனத்தை பெறமுடியுமென்று யோசிக்கலாம். எதிர்க்கட்சியில் இருந்தவாறு ராஜபக்ஷக்களின் அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள முடியுமென்று எண்ணலாம்.

ஏனெனில், இன்றைய சூழலில் ராஜபக்ஷக்களுக்கு எதிரணி அரசியல்தான் மிகவும் சிறந்தது. ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் ஒரு முறை ஆடிப் பார்ப்போம் – தோற்றால் அமைதியாக இருப்போமென்று யோசிக்கும் வகையினர். அந்த அடிப்படையில்தான், 2015இல் தோல்வியுற்ற மஹிந்த ராஜபக்ஷ மீளவும் அரசியலுக்குள் நிமிர்ந்தார். அதேபோன்று, தானும் ஏன் நிமிர முடியாதென்று பசில் எண்ணக் கூடும். அதிலும், தன்னால்தான் பொதுஜன பெரமுன இந்தளவு வெற்றியை பெற்றதென்று எண்ணும் ஒருவர், அவ்வாறு சிந்தித்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இதற்கு 21ஆவது திருத்தச்சட்டம் முட்டுக்கட்டையை ஏற்படுத்தும்போது, அதனை தனது அணியைக்கொண்டு குழப்புவதற்கே பசில் யோசிப்பார். பசில் அணியை ரணில் எவ்வாறு சமாளிக்கப்போகின்றார் என்பதுதான் தென்னிலங்கையில் அடுத்த செய்தியாக இருக்கப் போகின்றது.

**வாரசாரம்** - *அரசியல் நிருபர்*

# காணாமல்போகும் கட்சி அரசியல்?

*அறுபதுகளின் தொடக்கத்தில் வெளியான ‘குமார ராஜா’ என்ற திரைப்படத்தில், சந்திரபாபு பாடிய பாடல் இது:*

*‘ஒண்ணுமே புரியலே உலகத்திலே*
*என்னமோ நடக்குது மர்மமா இருக்குது*
*கண்ணிலே கண்டதும் கனவாய் தோணுது*
*காதிலே கேட்டதும் கதைபோல் ஆனது*
*என்னான்னு தெரியலே*
*சொன்னாலும் விளங்கலே...’*

*- காலிமுக திடல் போராட்டம் இரண்டு மாதங்களை அண்மிக்கிறது. அப் போராட்டத்தின் தாக்கமாக என்னென்னவோ எல்லாம் நடந்தது, நடக்கிறது. ஆனால், என்ன நடக்கிறது? என்ன நடக்கப்போகிறது?*

*எதுவுமே தெரியவில்லை, புரியவில்லை.*

*நாடு பெரும் கஷ்டத்துக்குள் இருக்கிறது. நாளாந்த வாழ்வில் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொள்கிறார்கள். இந்த நிலையில், ஓர் அவசரகால அரசாங்கத்தை அமைப்பதில், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றார். அவர் பதவியேற்று மூன்று வாரங்களாகின்றபோது, புதிய அமைச்சரவையும் தெரிவாகியிருக்கிறது.*

*ஆனால், அமைச்சரவையும், சூழும் அரசியல் நடவடிக்கைகளும் ஓர் அவசரகால அரசைக் காண்பிக்கவில்லை. ‘எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்’ என்றே அரசியல் வாதிகளின் கவனமும் செயல்பாடுகளும் துல்லியமாக தெரிகின்றன.*

*இலங்கையின் தனிப்பெருங் கட்சியாக உருவாகிக் கோலோச்சிய ஐக்கிய தேசிய கட்சி, பொதுத் தேர்தலில் ஓர் ஆசனம்கூட இன்றித் தோற்றவேளையில், அக் கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசிய பட்டியல் ஆசனத்தில் பாராளுமன்றம் வந்த அக் கட்சியின் ஒரேயோர் உறுப்பினரான அக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த அவசரகால வேளையில் பிரதமராக பதவியேற்றமையே, நாடுற்ற அவசர நிலையை தெளிவாக உணர்த்தும்.*

*இந்த அவசரகால நிலைக்கான பிரதமர் ரணில் என்பதில் அபிப்பிராய பேதங்கள் இருக்கவில்லை. இந்த அவசர நிலையில் நாட்டுக்கு மாத்திரமன்றி, இந்த அவசர நிலைக்கு காரணமானவர்களாக குற்றஞ்சாட்டப்படும் ராஜபக்ஷக்களின் அவசர நிலையில், அவர்களுக்கும் அவசியமானவராகவும் பாதுகாப்பானவராகவும் ரணில் அமைவார் என்பதும் பரவலாகவே பேசப்பட்டது.*

*இப்போது ரணில் பதவியேற்று மூன்று வாரங்கள் ஆகின்றபோது, நாட்டு மக்களை விட ராஜபக்ஷக்கள் நிம்மதிகொள்வதுதான் ரணிலின் பதவியேற்பின் பின் பெரிதும் வெளிப்படுவதாக பொதுவில் பேசப்படுவதாகிறது. நிவாரண எதிர்பார்ப்புகளுக்கு அப்பால், நிலைமையை சீரமைப்பதற்கு அரசின் துரித, நீண்டகால நடவடிக்கைகள் பெரிதாக வெளிப்படவில்லை. மக்கள் ஊக்குவிக்கப்படவில்லை. பாராளுமன்றத்தில் தமக்கு வழங்கப்படும் உயர்தர உணவைத் துறப்பதாக அறிவித்ததைத் தவிர, அரசியல் வாதிகள் எவ்வித சலனமுமின்றி, முழுக்க முழுக்க சுயநல அரசியலில் தீவிரமாயிருக்கிறார்கள். சமாளிக்க இயலாத நிதி நிலைமையில் புதிய பண நோட்டுகள் அச்சாகும் போது, நாட்டைக் காக்க, பாரிய எண்ணிக்கையிலான அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் பதவியேற்கிறார்கள்.*


*ஆக, எங்களுடைய தமிழ் அரசியலில் பிந்திய திடீர் அறிவிப்பாக, ‘பூச்சுக்கள்’, ‘ஒட்டல்கள்’ இல்லாத, புத்தம்புதிய அரசமைப்புக்கான கோரிக்கை தமிழ் மக்களின் விடிவுக்காக முன்வைக்கப்பட்டிருக்கிறது. கட்சி அரசியல் தமிழ் மக்களிடமிருந்து காணாமல் போய்விட்டது. எல்லோரும் இப்போது சுயேச்சை அரசியல்தான் செய்கிறார்கள். தமிழின அழிப்பு தின பிரகடனத்துக்காக கனடிய அரசுக்கு சிறிதரன் எம். பி. இலங்கை தமிழ் மக்கள் சார்பில் நன்றிக் கடிதம் அனுப்பியிருக்கிறார். அதில், தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்கு இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் சர்வதேச கண்காணிப்புடனான சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த உதவவும் அவர் கனடிய அரசைக் கோரியிருக்கிறார். தேர்தல் ஒன்று வரத்தானே போகிறது? அதில் வெல்லாவிட்டால், மக்களுக்கு எப்படி சேவை செய்வது!*

*ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தில், 13ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தை இந்திய மத்திய அரசிடம் முன்வைத்தவர்கள், இந்தியா இப்போது இலங்கைமீது சற்று செல்வாக்கு செலுத்துகின்ற வேளையில் மூச்சும் விடாமலிருக்கிறார்கள். ‘உங்கள் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் எப்படி இப்படி நடந்துகொள்கிறார்கள்?’ என்று, அண்மையில் ஒரு வெளிநாட்டு இராஜதந்தரி சிலரையும் சிலவற்றையும் குறிப்பிட்டு, ஆச்சரியமாகவே கேட்டார்.*

*இவைபோக, துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதியின் பொது மன்னிப்பு தொடர்பிலான விவகாரம், ஜே. ஆர். ஜயவர்த்தன காலத்தில் நிகழ்ந்த இதே வித மன்னிப்பு சம்பவம் ஒன்றை நினைவில் கொணர்ந்தது. பொது மன்னிப்பில் முதலாம் எதிரி விடுதலை செய்யப்பட்டபோது, இரண்டாம் எதிரியையும் ஏன் விடுதலை செய்யக்கூடாது என்று பாராளுமன்றத்தில் அநுர பண்டாரநாயக்க சபை ஒத்திவைப்பின் போது கேள்வி எழுப்பினார். அமைச்சர் அதற்கு ஏதோ பதிலளித்தார். அப்போது, அநுர மீண்டும் எழுந்தார். சம்பந்தப்பட்ட அமைச்சர் பதிலளித்த பின்னர் மீண்டும் அதில் கேள்வி எழுப்ப இயலாது என்றார் பிரதமர் பிரேமதாச. அமைச்சரின் பதிலில் எனக்கு திருப்தியில்லை என்றார் அநுர. உம்மை எவரும் திருப்படுத்த இயலாது என்றார் பிரேமதாச. அப்போது அநுர வெகு நிதானமாக, “ஒருவரைத் தவிர” என்றார். “யார்” என்றார் பிரதமர்.*

*எதிர்பார்த்திராத அநுரவின் பதிலில் ஒரு கணம் மௌனமடைந்த பிரேமதாச, தன்னைச் சுதாகரித்துக்கொண்டு கூறியவையும், இருவருக்குமிடையில் தொடர்ந்த சொல்லாடல்களும் சபாநாயகரின் பணிப்பில் ஹன்சார்ட்டிலிருந்து நீக்கப்பட்டன. சபை இவ்வேளையில் திகைப்புடன் நிசப்தத்தில் மூழ்கிப்போயிருந்தது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -32

# கிராமியப் பொருளாதாரம்

கணபதி சர்வானந்தா

இன்று ஒரு பரம ஏழையின் நிலையில் நாம் இருக்கிறோம். கடையில் பொருட்கள் உண்டு, அவற்றை வாங்கக் காசு கையில் இல்லை என்ற நிலை. தற்காலச் சூழ் நிலையை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால்... உடனடியாக இல்லாவிட்டாலும் வெகுவிரையில் ஒரு பாரிய நெருக்கடியை நாம் சந்திக்கப் போகிறோம் என்ற உணர்வே மேலிடுகிறது. உடலில் விஷம் ஏறுவதைக் காட்டிலும் அதி வேகமாக விலைவாசி ஏற்றம்... ஆனால் மக்கள் அதன் தாக்கத்தை உணருவ தாக இல்லை என்ற மன வருத்தத்தோடு இப் பகிர்வு அமைகிறது.

நாடு மிகவும் ஒரு இக்கட்டான பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கப் போவதாக எதிர்வு கூறப்படுகிறது. அந் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்ள எம்மிடத்தில் எதுவித திட்டங்களும், அதற்கான முன்னெடுப்புகளும் இருக்கிறதா? என்று கேட்டால், இல்லை என்பதைத் தவிர வேறு பதில் எம்மிடத்தில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எதிர்கொள்ளலாம் என்று சந்தேகிக்கப்படுகின்ற அப் பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து அதன் சங்கிலியாகத் தொடர்ந்து வரப் போகின்ற நெருக்கடிகளை யார் இனம் காண்பது? எப்படி இனம் காணப் போகிறோம்? அதில் ஒரு நாட்டின் செயற்பாடு என்ன? அதற்கு எவ்வாறு மக்கள் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்? இவ்வாறான கேள்விகளுக்கு விடை காணாது, அது எமது பிரச்சினை இல்லை என்பதைப் போலவும், அது வேறோர் இடத்தில் உள்ள மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை என்பதைப் போலவும் பதட்டமில்லாது... மிகவும் ஆறுதலாக... விலை ஏற்றத்துக்கு ஏற்பப் பொருட்களை வாங்கி நாளைச் சமாளித்துக் கொண்டிருக்கிறோம். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி என்பது தற்காலிகமானது ஒன்றே என்ற உணர்வே எம்மிடம் இருப்பதாகத் தோன்றுகிறது. அதனால்தான் பதட்டம் எம்மிடம் இல்லை.

அந்த நிலைமைக்கு அரசும் அதன் நடவடிக்கையும் தான் முக்கிய காரணமாகம் என்கின்றனர் மக்கள். கடன் வாங்கி நிலைமைகளைச் சமாளிப்பதென்ற பொருளாதாரக் கொள்கையையே அரசு கொண்டிருக்கிறது. அதனால்தான் நாடு சீர்கெட்டுப் போய்விட்டதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

யுத்தத்துக்கு பின்னர் வட புலத்துக்குக் கொண்டுவரப்பட்ட நிதி நிறுவனங்களும் அவை ஏற்படுத்திய குடும்பப் பொருளாதார மாற்றங்களும் அதனால் ஏற்பட்ட சமூகப் பிறழ்வுகளும் என்ற விடயங்களைச் சீர் தூக்கிப் பார்ப்போமாகில்... நிதிபற்றிய பல விடயங்களை நாம் விளங்கிக் கொள்ளலாம். அப்படிப்பட்டதொரு ஒரு தவறான நிதிப் பண்பாட்டைக் கொண்டதானால் தான் அரசு கடனில் மூழ்கிப்போயிருக்கிறது. அதன் விளைவாக நாட்டில் உள்ள மக்கள் அனைவரது தலைகளிலும் வேண்டாத வரிச்சுமைகள் சுமத்தப்பட்டிருக்கிறது. கடன் சுமைகளே இன்றைய கசப்பான விளைவுகளுக்குக் காரணம் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

கோட்பாடுகளுக்கு அமையாத தொலை நோக்கற்ற பொருளாதார நவடிக்கைகளை அரசு முன்னெடுத்தது. அதன் விளைவே இன்றைய நெருக்கடிகள். அபிவிருத்து என்ற போர்வையில் தெற்கிலங்கையில் செய்யப்பட்ட அநாவசிய முதலீடுகள். அம்பாந்தோட்டை விமான நிலையம், அப்பாந்தோட்டைத் துறைமுகம், மிகவும் நவீன வசதிகளை உள்ளடக்கிய விளையாட்டரங்கு போன்ற பல முதலீடுகளால்தான் நாடும் நாட்டின் பொருளாதாரமும் அதலபாதாளத்துக்குள் வீழ்த்தப்பட்டதாகப் பேசப்படுகிறது.

அடுத்ததாக அரசு விதித்த பொருத்தமற்ற வியாபாரத் தடைகளைக் குறிப்பிடலாம். இவ்வாறான தடைகளைச் செய்யும் போது அரசு அதனை ஒரு நீண்டகால அடிப்படையில் சிந்தித்திருக்க வேண்டும். இதுபோன்று இறக்குமதிக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவரும்போது அவை ஏற்படுத்தக் கூடிய உடனடி தாக்கங்கள் பற்றி அரசு வலுவாக ஆராய்ந்திருக்க வேண்டும். மாற்று நடவடிக்கைகளை முன்வைத்த பின்னரே மாற்றங்களைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அதற்கு உதாரணமாக இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட இறக்குமதித் தடையை முக்கியமாகச் சொல்லலாம். உரத்தைத் தடை செய்த போது அதற்குரிய மாற்றீடாக அரசிடம் எந்தவித திட்டமும் கையில் இல்லை. பின்னர் சேதனப் பசளை பற்றி ஆலோசனை வழங்கியவர்களும் அரசை ஒரு காத்திரமான போக்கில் வழி நடத்தாததன் விளைவே... சீனாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சேதனப் பசளையும். அது தொடர்பாக எழுந்த சர்ச்சைகளும், அது தொடர்பாக சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட மன முறிவுகளும் என்று பல விடயங்கள் சொல்லப்படுகிறது.

ஒரு பொருத்தமான மாற்றீட்டு யோசனையை முன்வைக்காது விதிக்கப்பட்ட இரசாயான உரத்தடை என்ற விடயம் பாரிய அளவில் நெற் செய்கையைப் பாதித்திருக்கிறது. கடந்த பெரும் போகத்தின்போது உரமில்லாததால் பலர் பாரிய அளவில் நெற் செய்கையில் ஈடுபடவில்லை. அதனால் எமது தேசிய உணவான அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. தொடரும் அதன் விலை ஏற்றத்தையும் எம்மால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

எனவே ஒரு தொடர் சங்கிலியாக எம்மைப் பயமுறுத்தப் போகும் எதிர்கால நிலைமைகளை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? அதனை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு அதனின்றும் மீளப்போகிறோமா? இல்லாவிடில் அந்த நீரோட்டத்தில் கலந்து கொண்டு எம்மை நாம் தொலைத்துக் கொள்ளப் போகிறோமா? ஆழமாகச் சிந்திக்க வேண்டிய விடயம் இது.

அனைத்து விடயங்களிலும் நாம் மாறியாக வேண்டும். எம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லப் பட்டாலும் யாரிடமும் அதற்குரிய யோசனைகளும், திட்டங்களும் இல்லை என்பதுதான் மிகவும் ஆபத்தான விடயமாகத் தென்படுகிறது.

எனவே வந்த பின் பார்ப்போம் என்றிராது.. வருமுன் காப்போம் என்றவாறு மக்களாகிய நாமே ஒரு முன்னெடுப்பைச் செய்தாக வேண்டும். வருமானத்துக்கு ஏற்ப.. பொருட்களின் தட்டுப்பாடுகளுக்கு அமைவாக... ஒரு வரையறைக்கு உட்பட்டதாக... எமது வாழ்க்கை முறையை வகுத்தாக வேண்டும். ஒரு நீண்ட யுத்த காலத்தை எதிர்கொண்டவர்கள் என்ற வகையில் அதற்கான வழிவகைகள் எம்மிடம் உண்டு. பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளக் கையாண்ட யுக்திகள் எம்மிடம் உண்டு. எனவே குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் தமக்கேற்றவாறு ஒரு புதிய பொருளாதார மாற்றத்தை வடிவமைக்கக் கூடிய வல்லமை உள்ளவர்கள். எம்மிடையே காணப்படும் வளங்களைக் கொண்டு ஒரு புதிய வாழ்வியலுக்கான வடிவத்தை ஏற்படுத்தலாம். ஆகக் குறைந்தது 1950 களில் காணப்பட்ட வாழ்வியலை அனுபவமாகக் கொண்டு இக்காலத்துக் கேற்றவாறு ஒரு மாற்றத்தைச் சிந்திப்போம். எமது கிராமத்தில் காணப்படும் வளங்களுக்கேற்றவாறு... கிராமியப் பொருளாதாரம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எமது சிந்தனை நீளட்டும்.

# இந்தவார ராசிபலன் 05.06.2022 - 11.06.2022

ஜுன் 05 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 22

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

செயல்களில் எதிர்பார்த்த வெற்றியை அடைவீர்கள். எதிர்பார்த்த வரவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். தொழிலில் இருந்த தடைகள் அகலும். சுபச்செலவுகள் அதிகரிப்பதுடன் வீடு, மனை, வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும்.கோயில் தரிசனத்தால் சந்தோஷம் அடைவீர்கள்.தொழிலில் இருந்த பிரச்னைகளை சரிசெய்வீர்கள். வருமானம் பல வழியிலும் வர ஆரம்பிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற எண்ணமும் அதற்குரிய செயலும் மேலோங்கும். தனித்திறமையால் எதிரிகளின் தொல்லை இல்லாமல் போகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். உத்தியோகத்தில் இருந்த பிரச்னைகளை சரி செய்வீர்கள். பிள்ளைகளின் கல்வி, திருமண முயற்சிகளில் இறங்குவீர்கள். எதிர்பாராத வருவாய் உண்டாகி தாராளமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும்.செல்வாக்கு அதிகரிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

அந்நியர் ஆதரவால் நினைத்ததை சாதிப்பீர்கள். முயற்சி வெற்றி பெறும். எதிர்பாராத வரவுகளால் உற்சாகம் அதிகரிக்கும். சோம்பல் விலகி வேகமாக செயல்பட ஆரம்பிப்பீர்கள்.பிள்ளைகளால் செலவு அதிகரிப்பதுடன் சில பிரச்னைகளையும் சந்திக்க வேண்டியதாக இருக்கும். தொழிலில் சரிவு ஏற்பட்டாலும் அதை சரி செய்வீர்கள். பூர்வீக சொத்துகளில் பிரச்னை நீடிக்கும். இழுபறியாக இருந்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

முயற்சிகளில் தாமதம் ஏற்பட்டாலும் நினைத்ததை சாதிப்பீர்கள். ஞாயிறு வரை விருந்து விசேஷம் என பங்கேற்பீர்கள். குடும்ப நலனில் அக்கறை கூடும். வீடு, வாகன வகையில் செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவுகளால் பிரச்னைகளை சந்திக்க வேண்டியிருக்கும். தொழில், பணியில் விருப்பம் நிறைவேறும்.தந்தைவழி உறவுகளின் ஆதரவால் நினைத்ததை சாதிப்பீர்கள். சந்தோஷம் அதிகரிக்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நினைத்தவற்றை அடைவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். குடும்ப வகையில் செலவு அதிகரிக்கும். மனதில் பலவித எண்ணங்களும் ஆசைகளும் உண்டாகும். தைரியமாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். உங்களின் சுய ஆற்றல் வெளிப்படும். உடல் நலனில் கூடுதல் கவனம் தேவை.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நினைத்த செயல்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி, திருமண முயற்சியில் ஈடுபடுவீர்கள். செலவு கூடும். வேலைகளில் இழுபறி இருக்கும். பிரச்னைகள் முடிவிற்கு வரும். பணவரவு அதிகரிக்கும். தொழில், பணியில் இருந்த பிரச்னைகள் விலகும். குடும்பத்தில் சுபச்செலவுகள் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னை ஒன்று இந்த வாரம் முடிவிற்கு வரும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

எதிர்ப்புகளை முறியடித்து நினைத்ததை சாதிப்பீர்கள். தடைபட்ட வருவாய் வரத் தொடங்கும். வார பிற்பகுதியில் செலவு அதிகரித்தாலும் நிம்மதிக்கு குறைவிருக்காது. நட்புகளிடம் எச்சரிக்கை அவசியம். ஒரு சிலர் உங்களுக்குத் தவறான வழி காட்டுவார்கள். பண வரவிற்கு வழி உண்டு. குடும்பச் செலவு அதிகரிக்கும். யோசித்து செயல்படுவது அவசியம்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில், பணியில் எண்ணம் நிறைவேறும். விலகிச்சென்ற உறவினர் தேடி வருவர். பிள்ளைகளால் நன்மை உண்டாகும். ஒரு சிலருக்கு விரும்பிய இடமாற்றம், ஊர் மாற்றம் உண்டாகும். செல்வாக்கு உயரும்.எதிர்ப்பே இல்லாமல் போகும். பணியின் காரணமாக வெளியூர் செல்வீர்கள். செயல்களில் வேகம் உண்டாகும். நீங்கள் விரும்பிய பொருள் கைக்கு வரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

மனதில் குழப்பம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பணத்தடை விலகுவதால் விரும்பிய வகையில் செலவுகள் செய்வீர்கள்.குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் விலகும். ஆரோக்கியம் மேம்படும். அடுத்தவரின் நலனுக்காக உங்களை வருத்திக்கொண்டு செயல்படுவீர்கள். செயல்களில் நிதானமும் கவனமும் தேவை.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

எண்ணம் நிறைவேறும். திங்கள், திட்டமிட்டு செயல்படுவதால் முயற்சிகள் வெற்றியாகும். சகோதரர்கள் உதவியால் விருப்பம் நிறைவேறும்.உடல்நலனில் கவனம் தேவை. தொழிலில் கூடுதல் அக்கறை தேவைப்படும். அடுத்தவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். அதனால் சிக்கல்களை சந்திக்க நேரலாம். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்ததை அடைவீர்கள்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


உடல் நிலையில் இருந்த சங்கடம் விலகும். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். பணியில் இருந்த பிரச்னை முடிவிற்கு வரும். புதிய முயற்சி பலிதமாகும். செல்வாக்கு அதிகரிக்கும். தடைபட்ட செயல்களில் முன்னேற்றம் காண்பீர்கள். கணவன் மனைவி உறவு பலப்படும். திட்டமிட்டு சில செயல்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். துணிச்சல் அதிகரிக்கும். பண வரவு அதிகரிப்பதால் குடும்பத்தேவை நிறைவேறும். எதிர்பாராத சங்கடம் ஏற்படலாம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகளில் இழுபறி உண்டாகும். வார்த்தைகளில் எச்சரிக்கை தேவை. குடும்பத்திற்குள் தேவையற்ற குழப்பங்கள் உண்டாகலாம். பொறுப்பு அதிகரிக்கும். அரசு வகையில் இருந்த நெருக்கடிகள் விலகும். பணியாளர்கள் உயரதிகாரிகளால் பாராட்டப்படுவர். பேச்சில் நிதானம் அவசியம்.எதிர்பாராத பிரச்னைகள் உருவாகும். சிலருக்கு திருமணப்பேச்சு கூடிவரும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். பேச்சு, உடல்நலனில் கவனம் தேவை.முயற்சிகளில் தடை. பயணத்தில் சிக்கல் என்ற நிலைகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும்.

# இலங்கையில் ஒரு தேசிய அரசு விரைவில் உருவாகவேண்டும்

**சென்னை மடல்**
**-பகவான் சிங்-**



## சுய பரிசோதனையின் கட்டாயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் ஈழ வரலாறு கற்கும் மாணவன் எளிதாகவே கண்டறிந்த உண்மை

ஒரு பெரிய நாட்டின் அருகிலிருக்கும் சிறிய நாடுகள் அதன் நிழலுக்குள் அடங்கியும் ஆதிக்கத்தில் சிக்கியும் இருக்கும் என்பது வரலாற்றின் யதார்த்தம். தன் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும், தனது அண்டையிலுள்ள சிறிய நாடுகளைத் தனது தாக்கத்தின்கீழ் வைத்திருக்க, அந்தப் பெரிய நாடு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும். தனது அயலுறவுக் கொள்கையாலும் அயலுறவு விவகாரங்களைச் சரிவரக் கையாளாததாலும் இந்தியா இதற்கு ஒரு விதிவிலக்காக இருந்தது. இதனால், கடந்த பல ஆண்டுகளாக, பாகிஸ்தான் மட்டுமல்லாமல், மற்ற அனைத்து அண்டை நாடுகளுக்கும் இந்தியாவுடனான இணக்கமில்லா உறவே நிலவி வந்திருக்கிறது. இந்திரா காந்தியால் உருவாக்கப்பட்ட நாடான பங்களாதேஷ் கூட இந்தியாவுக்கு விசுவாசமாக இல்லை. மாலைதீவுகள், இலங்கை உள்ளிட்ட மற்ற அண்டை நாடுகளின் நிலையும் இதேதான்.

ஆனால் இப்பொழுது, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள தவறுகளைச் சரிசெய்ய, நரேந்திர மோடி அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருவது போல் தெரிகிறது. மிகத் தேர்ந்த மூத்த இராஜதந்திரியான டாக்டர் ஜெய்ஷங்கரை வெளியுறவுத்துறை அமைச்சராக நியமித்தது, இந்தத் திசையில் மேற்கொள்ளப்பட்ட மிகச் சாதுர்யமான முதல் முயற்சியாகக் கருதப்படுகிறது. பாக். ஜலசந்தியிலிருந்து வெறும் 40 நிமிடப் படகுப் பயண தூரத்தில் இருக்கும் தெற்கு எல்லை நாடான இலங்கையில் இந்த நடவடிக்கைகளின் தாக்கம் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெளிவாகத் தெரிகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் தாராளமாக உதவிகளை வழங்கி வருவதுடன், ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆதிக்கத்தை ஒழித்து நீண்ட நாள் பலனளிக்கக்கூடிய அரசியல் நகர்வுகளையும் இந்தியா பெருமளவில் மேற்கொண்டு வருகிறது. இந்தப் பொருளாதார, அரசியல் இலக்குகளை எட்ட அதிக கால அவகாசமும் பெருமுயற்சியும் தேவை என்றாலும், தொடங்கப்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், 'க்வாட்' நாடுகள், இங்கிலாந்து மற்றும் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளின் ஆதரவும் இதற்கு உண்டு என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இலங்கையின் மீதான தனது கட்டுப்பாட்டை இந்தியா மீட்டெடுப்பதை சீனா அமைதியாகப் பார்த்துக்கொண்டிராது. நமது அரசியல் தலைவர்களில் பலர் சீன ஆதரவாளர்கள் என்பதும், அவர்கள் பீஜிங்கின் ஆணைக்கிணங்கவே செயல்படுவார்கள் என்பதும் நாமறிந்ததே. சில தமிழ்த் தலைவர்கள் உட்பட, செல்வாக்கு மிக்க பல எதிர்க்கட்சித் தலைவர்கள் ஏற்கெனவே 225 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றத்தில், தன் கட்சியின் தனி உறுப்பினரான ரனில் விக்ரமசிங்க, மக்கள் நம்பிக்கையிழந்த ராஜபக்ஷ குடும்பத்தினரின் பொதுஜனபெரமுன ஆதரவுடன் செயல்படுகிறார் என்ற கடும் விமர்சனங்களை எழுப்பி வருகிறார்கள். ஆனால் இவர்கள், இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்க ரணில்தான் சரியானவர் என்று முடிவெடுத்து, அவரை நாற்காலியில் அமர வைத்தது, இந்தியா மற்றும் மேற்கு நாடுகளே என்ற வெளிப்படையான உண்மையை அங்கீகரிக்க மறுக்கின்றனர். இந்த விமர்சகர்கள், ராஜபக்ஷ குடும்பத்தினரின் தலையீடு இல்லாத ஓர் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று கோருகின்றனர். இதற்கு மாற்றாக, மீண்டும் தேர்தல் நடைபெற வேண்டும் என்று இவர்கள் விரும்புகின்றனர். ஆனால், தேர்தல் செலவுகளை விடுங்கள், வாக்குச் சீட்டுகளை அச்சடிக்கக்கூட திறைசேரியில் பணமில்லை என்பதை இவர்கள் உணர மறுக்கிறார்கள்.

பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டு, உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு குறைந்தால்தான் இந்த அரசியல் மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று நான் ஏற்கெனவே எனது 'ஈழநாடு' கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால், இவர்கள் கோரும் நேர்மையான ஜனநாயகமும் வெளிப்படையான நிர்வாகமும் சாத்தியமாக வேண்டுமானால், பெரும்பான்மை சிங்கள சமூகத்தினருக்கு மட்டுமல்லாமல், 2.1 கோடிக்கும் மேலான அனைத்து மக்களுக்குமான பிரதிநிதித்துவம்கொண்ட ஒரு வலுவான, தேசத்தைப் புனரமைக்கக் கூடிய, நல்லிணக்கம் கொண்ட, இது வரை நல்லாட்சி தராத அனைத்து ஆட்சியாளர்களுக்குமான வலுவான மாற்றாக ஒரு தேசிய அரசு விரைவில் உருவாக இவர்கள் ஆதரவளிக்க வேண்டியது அவசியம். நாட்டைச் செலுத்தும் உந்து சக்தியாக வெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், சிவில் சமூகத்திடையேயிருந்து ஓர் அறிவார்ந்த சமூகத்தையும் உள்ளடக்கிய அரசியல் சாசன மாற்றம் உருவாக்கப்படவேண்டியது அவசியம். இதுபோன்றவற்றை உள்ளடக்கிய ஒரு நிர்வாகத்தைத் தாமதமின்றி உருவாக்குவது இந்த இலங்கைத் தீவின் அரசியல் ஸ்திரத்தன்மையை நோக்கிய முதல் படியாகும். இதன்மூலம், பொருளாதார மீட்பும் துரிதப்படுத்தப்படுவது நிச்சயம். சிக்கலான சமூக-அரசியல் பிரச்னைகளுக்குச் சரியான தீர்வுகளை வழங்கக்கூடிய அறிவார்ந்த சமூகத்துடன் தங்கள் கட்சிகளுக்காகவும் தலைவர்களுக்காக வும் மட்டுமல்லாமல் அனைத்து மக்களுக்கா கவும் நாட்டுக்காகவும் கவலைப்படக்கூடிய இதயம் கொண்டவர்களும் இதற்குத் தேவை. அனைத்துப் பிராந்திய, இன, மத, மொழி களைச் சார்ந்த மக்களையும் அரவணைத்துச் செல்லும் ஒரு புதிய தேசியவாத சிந்தனையும், ஒவ்வொரு குடிமகனும் 'இது எனது நாடு. உன்னுடையதும் கூட' என உணரும் தேசப்பற்றும் துளிர்விடவேண்டியது இதற்கு மிகவும் அவசியம்.

அரசியல் களத்தில் இருக்கும் அநேக ஆண்களும் பெண்களும் நான் மேலே குறிப்பிட்ட வண்ணக்கனவுகளுக்குப் பொருத்தமானவர்களாக இல்லை என்பதையும் பல முறை குறிப்பிட்டுள்ளேன். அதனால்தான், அரசியலமைப்புச் சட்ட மாற்றங்கள் மற்றும் நீதித்துறை அறிவிப்புகள் மூலம் அத்தகைய ஒரு புதிய அமைப்பு முறையைக் கொண்டுவரவேண்டும் என்று தொடர்ந்து கோரி வருகிறேன். அனைத்துக்கும் மேலாக, உண்மையான ஜனநாயக மாற்றுக்கு வித்திடும் வகையில் கோட்டாபய பதவி விலக வலியுறுத்தும் காலிமுக கோரிக்கையின் விரிவாக்கமாகவும் இது இருக்க வேண்டும். நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீட்க, மாற்றம் கோரிப் போராடுவோர், அந்த மாற்றத்திற்குப் பின்னரான பொறுப்புகளிலும் பங்கேற்கத் தயாராக இருக்க வேண்டும். அதேபோல, இந்தப் புரட்சியிலிருந்து விலகியிருக்க விரும்புவோருக்கு வெற்றியின் பலனைக் கோரும் தார்மீக உரிமையும் இல்லை. இதைப் பல முறை வலியுறுத்தி வந்திருந்தாலும் மீண்டும் சொல்லவேண்டியுள்ளது. காரணம், நமது 'தலைவர்கள்', குறைந்து வரும் தங்கள் வாக்கு வங்கியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, பொறுப்பற்ற முறையில் பல கருத்துகளை வெளியிட்டு வரும் சூழலில் அது அவசியமாகிறது. குறிப்பாக, குறுகிய நோக்குப் பார்வைகொண்ட நமது தமிழ்த் தலைவர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, இலங்கை அரசியலில் முக்கிய பங்கு வகித்து, புதிய நிர்வாகத்தில் தங்கள் பங்கை ஆற்றத் தவறுவது குறித்து மிகுந்த கவலை கொண்டுள்ளேன்.

இந்த இடத்தில், மே 14 அன்று, தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுக் கூட்டத்தில், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை கூறியதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மே மாதத் தொடக்கத்தில் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செய்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் உட்பட, பல தலைவர்களைச் சந்தித்துத் திரும்பிய அவர் தனது உரையில், "இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லை என்பதுதான் நிதர்சனம். இதற்கு முன்னர் நடந்த தேர்தலுக்கும் இப்போது நடந்த தேர்தலுக்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 6 ஆசனங்களை இழந்திருக்கிறது. 16 எம்பி-யிலிருந்து 10 எம் பி-யாக வந்திருக்கிறார்கள். எந்த சிங்களத்தை வேண்டாம் என்று சொல்கின்றோமோ, அவர்கள் 2 ஆசனங்கள் ஜெயித்து உள்ளே வந்துள்ளார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கொந்தளிக்கும் ஈழ வரலாற்றைக் கற்கும் புதிய மாணவரான ஒரு தமிழக அரசியல் தலைவர்கூட, தனது குறுகிய காலச் சுற்றுப்பயணத்திலேயே, இங்குள்ள தமிழ்த் தலைவர்களிடையே உள்ள ஒற்றுமையின்மையைக் கண்டறிந்துள்ளார் என்றால், இவர்கள் தங்களைத் தாங்களே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருப்பது உண்மைதானே?

அண்ணாமலை ஏன் திடீரென ஈழ வரலாறு படிக்கும் மாணவரானார் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவர் கொழும்புக்குச் செல்ல விமானம் ஏறும் முன், தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சியின் வியூகம் குறித்துக் கட்சித் தலைமையிடம் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். திராவிடக் கொள்கை கொண்ட இம் மாநிலத்தில், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளான திராவிடர் கழகம், வைகோவின் மதிமுக, சீமானின் நாம் தமிழர் கட்சிகள், மே 17 இயக்கம் ஆகிய அமைப்புகள் இளைஞர்கள் மனதில் பாஜக எதிர்ப்பு, மோடி எதிர்ப்பு என்னும் கருத்தை விதைத்து வருகிறார்கள். அடுத்த 2024 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர், இந்த நிலையை மாற்றித் தனது கட்சியைப் பொது மக்கள் ஏற்கும் சக்தியாக முன்னிறுத்த என்ன செய்யவேண்டும் என்பது குறித்து அண்ணாமலை கவனம் செலுத்துகிறார். இது, 2026 சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றி என்ற இலக்கை எட்டப் பாதை வகுக்கும். ஈழப் படுகொலை என்பது, தமிழக அரசியலில் ஓர் உணர்ச்சி மிக்க பிரச்னையாக இருக்கும் நிலையில், ஈழத் தமிழர்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய ஒரே கட்சி, ஒரே தலைவர் பாஜக, நரேந்திர மோடிதான் என்ற கருத்துருவாக்கம் செய்து, இந்தப் பிரச்னையை திராவிடக் கட்சிகளின் கைகளிலிருந்து தட்டிப்பறிக்க அவர் தொடங்கும் முயற்சி இது, தன் கட்சி மேலிடத்தின் ஊக்கத்துடன்.

தனது வெற்றிகரமான இலங்கைப் பயணத்தை முடித்துத் திரும்பிய அடுத்த ஒரு வாரத்தில், இந்த முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவுக் கூட்டத்தில் பங்கேற்ற அண்ணாமலை, தீவிர ஈழ ஆதரவாளர்களான விடுதலைப் புலி கவிஞர் காசி ஆனந்தன், பழ. நெடுமாறன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோருடன் மேடையைப் பகிர்ந்துகொண்டார். தமிழ் மக்கள் உட்பட, இலங்கைக்கு மோடிதான் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் என்ற வாதத்தை அவர் முன்வைத்தார். இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு இந்தியா வழங்கியுள்ள உதவிகளைப் பட்டியலிட்டதுடன், பல ஆண்டுகள் முன்னர் சிங்களர்களால், "எங்கே யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதோ, அதற்கு அடுத்த கட்டடமாக மோடிஜி யாழ்ப்பாணக் கலாசார மையத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிறார். 12 மில்லியன் டொலர். முழுவதும் இலவசமாக யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இந்திய நாடு இலவசமாகக் கட்டிக் கொடுத்திருக்கிறது. 13 மாடிக் கட்டடம். இலங்கையிலேயே அந்த மாதிரி ஒரு கட்டடம் எங்கும் கிடையாது. காரணம், கலாசாரத்தைப் பேணிக்காக்க வேண்டும். எங்கே நீ எரித்தாயோ அதற்கு அடுத்த கட்டடம்" என்று உரையாற்றினார். மேலும், "பலாலி விமான நிலை யத்தை மீண்டும் திறக்க, 300 மில்லியன் இலங்கை ரூபாய்களைக் கொடுத்தது மோடி அரசு. இலங்கையில் இருக்கும் பஞ்ச ஈஸ்வர கோவில்களில் ஒன்றைப் புனரமைக்க மோடிஜி தனிப்பட்ட முறையில் 300 மில்லியன் இலங்கை ரூபாய்களைக் கொடுத்துள்ளார். ஜூலை 6ஆம் திகதி கும்பாபிஷேகம் நடக்கிறது"என்று குறிப்பிட்டார்.

அந்த மேடையில் அவர் குறிப்பிட்ட இன்னொரு விஷயம் தலைப்புச் செய்தியானது. 2007-2009 காலகட்டத்தில் அப்போதைய இந்திய அரசும் இன்னும்சில சர்வதேச அரசுகளும் இணைந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைச் சம்பவத்தை அரங்கேற்றியதாகக் குற்றம்சாட்டிய அண்ணாமலை, அப்போது நரேந்திர மோடி பிரதமராக இருந்திருந்தால் வரலாறு மாறியிருக்கும் என்று குறிப்பிட்டார். அவர் தனது உரையில், காந்தி குடும்ப காங்கிரஸ் மற்றும் திமுகவின் முதல் குடும்ப ஆதிக்கம் ஆகியவற்றைக் கண்டனம் செய்தார். ஈழப்போரை நிறுத்த கருணாநிதி மேற்கொண்ட 2 மணி நேர உண்ணாவிரதத்தைப் பரிகாசம் செய்து பேசினார். அவருடைய வியூகத்தில், இலங்கையிடமிருந்து 99 வருடக் குத்தகைக்கு கச்சதீவை எடுப்பது குறித்த குறிப்பும் அடக்கம். இது குறித்த சுவாரஸ்யமான ஓர் அம்சத்தை அடுத்த ஞாயிற்றுக்கிழமை உங்களைச் சந்திக்கும்போது பகிர்கிறேன்.

இலங்கை மற்றும் தமிழகத் தமிழர்கள் தங்கள் எதிர்காலம் குறித்துச் சிந்திக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. குறிப்பாக, ஆக்கப்பூர்வமாக எதையும் செய்யாமல், வாய்ச்சொல்லில் வீரரான யாழ்ப்பாணத் தலைவர்கள் மற்றும் தமிழக திராவிடத் தலைவர்களின் உரத்த உரைகளையும் கேட்டு மயங்கிக் கிடந்து காலத்தை விரயம் செய்து விட்ட ஈழத் தமிழர்களுக்கு இனி அதிக நேரம் இல்லை. மோடி, ஜோ பைடன், ஷீ ஜின்பிங்க் , சர்வதேச நாணய நிதியம் போன்ற அயல் உதவிகளுக்குக் காத்திருக்கும் நாம், முதலில், நமக்குள் இருக்கும் வேற்றுமையைக் களைந்து, சிவில் சமூகத்தினரை உள்ளடக்கிய, ஒவ்வோர் எம் பி மற்றும் தலைவரையும் அவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் செயலின்மைக்கும் பொறுப்பாக்கும் ஒரு புதிய தலைமையை உருவாக்குவோம்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.



# 21 வது அரசியலமைப்பு திருத்தவரைவின் போதாமைகள்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

அரசியலமைப்புக்கான 21வது திருத்தத்தை கொண்டுவந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் அரசாங்கம் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கப்போகிறது என்பதை தற்போதைய அரசியல் நிகழ்வுப்போக்குகள் வெளிக்காட்டுகின்றன.

இரு வாரங்களுக்கு முன்னர் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட 21வது திருத்தவரைவு இரண்டாவது தடவையாகவும் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களினால் ஆராயப்படவிருந்தது.

21வது திருத்தத்தின் வடிவில் 2015 ஆம் ஆண்டின் 19 வது திருத்தமே மீண்டும் கொண்டுவரப்படவிருப்பதாக முதலில் கூறப்பட்டது. பிறகு 19வது திருத்தத்தின் பல ஏற்பாடுகளும் 2020 ஆண்டின் 20வது திருத்தத்தின் சில ஏற்பாடுகளும் உள்ளடங்கியதாக புதிய திருத்தம் அமையும் என்று கூறப்படுகிறது.

தற்போது பரிசீலனையில் இருக்கும் வரைவுக்கு ஆளும் கட்சியில் இருந்தும் எதிரணிக் கட்சிகளிடமிருந்தும் கடுமையான எதிர்ப்பு (வேறுபட்ட காரணங்களுக்காக) கிளம்பியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இந்த வரைவு குறித்து ஏற்கெனவே அதிருப்தி வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இப்போது பரந்தளவிலான சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தக்கூடிய அணுகுமுறை கையாளப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

தனிநபரிடம் அதிகாரங்களைக் குவித்துவைத்திருக்கும் ஆவணம் என்ற அந்தஸ்தை அரசியலமைப்பிடம் இருந்து எடுத்துவிடக்கூடியதாக சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என்றும் அத்தகைய மாற்றங்களைச் செய்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுக்கு மேலதிகமாக மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சர்வஜனவாக்கெடுப்பு அவசியமாயின் அதற்கு முகங்கொடுக்கவும் தயாராயிருக்கவேண்டும் என்றும் பிரேமதாச கூறியிருக்கிறார்.

அவருடைய நிலைப்பாடு இவ்வாறிருக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருப்பதற்கு அவசியமான பாராளுமன்ற பெரும்பான்மை ஆதரவை வழங்கிக்கொண்டிருக்கும் ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களில் பலரும் 21வது திருத்தவரைவை கடுமையாக எதிர்க்கிறார்கள்.

தங்களது பாராளுமன்றக்குழு கூட்டத்தில் பிரதமர் விக்கிரமசிங்க முன்னிலையிலேயே அவர்கள் ஜனாதிபதி கோட்டாபயவிடம் தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டினார்கள்.



21வது திருத்தத்தின் வடிவில் 2015 ஆம் ஆண்டின் 19 வது திருத்தமே மீண்டும் கொண்டுவரப்பட விருப்பதாக முதலில் கூறப்பட்டது. பிறகு 19வது திருத்தத்தின் பல ஏற்பாடுகளும் 2020 ஆண்டின் 20வது திருத்தத்தின் சில ஏற்பாடுகளும் உள்ளடங்கியதாக புதிய திருத்தம் அமையும் என்று கூறப்படுகிறது.

விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டது தற்போதைய படுமோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கவே தவிர, அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அல்ல. முதலில் பொருளாதார நிலைவரத்தை மேம்படுத்திய பின்னர் அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றி கவனிக்கலாம் என்பது பொது ஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் நிலைப்பாடு.

அந்த கட்சியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்சவே இவர்களை பின்னால் இருந்து வழிநடத்துகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். இரட்டைக் குடியுரிமையுடையவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது என்ற ஏற்பாட்டை வரைவில் இருந்து நீக்கவேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் பல உறுப்பினர்கள் வலியுறுத்துகிறார்கள்.இது ஏன் என்பது சொல்லித்தெரியவேண்டிய ஒன்றல்ல.

புதிய திருத்தத்தை கொண்டுவந்து நிறைவேற்றுவதென்பது பிரதமர் விக்கிரமசிங்கவுக்கும் பசிலுக்கும் இடையிலான கயிறிழுப்பாகவே அமையப் போகிறது. பிரதமர் ஜனாதிபதியை இது விடயத்தில் நம்பிக்கொண்டிருக்கிறார். பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோரின் ஆதரவை ஜனாதிபதியினால் உறுதிசெய்யக்கூடியதாக இருக்குமா என்றும் சந்தேகிக்கவேண்டியிருக்கிறது

விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவரைத் தவிர, ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாட்டை பாராளுமன்றத்திலோ அல்லது அரசாங்க பாராளுமன்றக்குழு கூட்டத்திலோ கூறுவதற்கு வேறு எவரும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திர கட்சி 21 வது திருத்தத்தை ஆதரிப்பதாக கூறியிருக்கிறது.

ஆனால், தனது கட்சியின் இரு முக்கிய உறுப்பினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டமை குறித்து சிறிசேன அதிருப்திகொண்டுள்ளார். சுதந்திர கட்சியில் இருந்து மேலும் சிலர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டால் அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் சிறிசேனவின் முடிவில் மாற்றம் ஏற்படாது என்று சொல்லமுடியாது.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வைப்பொறுத்தவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்காமல் மேலோட்டமான திருத்தங்களைச் செய்து ஜனாதிபதியைப் பாதுகாக்கும் நோக்கிலான முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைக்கத் தயாரில்லை என்பதே அதன் நிலைப்பாடு.

தற்போதைய வடிவில் 21வது திருத்தவரைவு பல தரப்பினருக்கு ஏற்புடையதாக இல்லை. ஆனால், நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச 21வது திருத்தம் 19வது திருத்தத்துக்கு அப்பால் செல்லாது என்பதை திட்டவட்டமாக கூறியிருக்கிறார். (09 ஆம் பக்கம் பார்க்க..)

# 21 வது அரசியலமைப்பு திருத்தவரைவின் போதாமைகள்

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களின் அங்கீகாரத்தை பெறுவதற்கு சர்வஜனவாக்கெடுப்புக்கு செல்ல வேண்டிய நிலை உருவாகாத வகையிலான திருத்தத்திலேயே அவர் கவனம் செலுத்துகிறார் என்பது தெளிவானது.

ஆனால், 19 வது திருத்தத்தில் இருந்த ஒப்பீட்டளவில் வலிமையான பல ஏற்பாடுகள் புதிய வரைவில் இல்லை என்று சட்டநிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார் கள்.

2015 - 2019 மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளின்போது பொதுமக்களிடமிருந்து கருத்துக்களை பெறுவதற்காக நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் தலைவராக இருந்த சட்டத்தரணி லால் விஜேநாயக்க, “19வது திருத்தத்தின் ஏற்பாடுகளை முழுமையாக மீண்டும் கொண்டு வருவதாகவே உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு செய்யப்படுவதாக இல்லை. புதிய வரைவில் பாராளு மன்றத்தை கலைப்பதற்கான ஜனாதிபதி யின் அதிகாரம் அப்படியே விட்டுவைக் கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படலாம். சுயாதீன ஆணைக்குழுக்கள் சம்பந்தப் பட்ட விடயம் முக்கியமானது. இந்த ஆணைக்குழுக்களின் தீர்மானங்கள் ஜனாதிபதிக்கு மேலானவையாக இருக்கவேண்டும்” என்று கூறியிருக் கிறார்.



“19வது திருத்தத்தின் முக்கியமான ஏற்பாடுகள் 21வது திருத்த வரைவில் கைவிடப்பட்டிருக்கின்றன. ஜனாதிபதி தனக்கு அமைச்சுக்களை ஒதுக்கமுடியாது என்றும் அமைச்சர்களிடமிருந்து பொறுப்புகளை அவர் எடுத்துக் கொள்ள முடியாது என்றும் 19வது திருத்த ஏற்பாடு கூறியது. ஆனால் அந்த ஏற்பாடு புதிய வரைவில் இல்லை. இது ஜனாதிபதியை வலுப்படுத்துகிறது. பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் அதிகாரமும் பாராளுமன் றத்தை கலைக்கும் அதிகாரமும் தொடர்ந்தும் ஜனாதிபதியிடம் விட்டுவைக்கப்படுகின்றன. இது அவர் பாராளுமன்றம் தொடர்பில் ஒரு தலைப்பட்சமான முடிவுகளை எடுக்க வழிவகுக்கும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவதை பெரும்பான்மையான மக்கள் விரும்புகிறார்கள் என்பது கருத்துக்கணிப்புக்கள் மூலம் தெரியவருகிறது” என்று அரசியலமைப்பு சட்டநிபுணரான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன கூறுகிறார்.



19வது திருத்தத்தின் சகல ஏற்பாடுகளுக்கும் சுதந்திர கட்சி ஆதரவாக இல்லை. இது கோட்டாபய - ரணில் அரசாங்கத் திற்குள் இருக்கும் முரண்பாடுகளை வெளிக் காட்டுகிறது என்றும் கலாநிதி விக்கிரமரத்ன சுட்டிக்காட்டுகிறார்.

“தற்போது அமைச்சரவை முன்னால் உள்ள 21வது திருத்த வரைவு பெரிய ஏமாற்றத்தைத் தருகிறது. அரசியல மைப்பு சீர்திருத்தங்களைப் பொறுத்த வரை, இந்த வரைவு அர்த்தமுடைய ஒரு நடவடிக்கையாக அமையாது. அதில் மாற்றங்கள் பலவற்றைச் செய்யாவிட்டால் பொறுப்புக் கூறக் கூடியதும் ஊழலற்றதுமான ஜனநாயக ஆட்சி முறையை வேண்டி நிற்கும் மக்களின் போராட்டங்களுக்கு செய்யப்படும் துரோகமாக அது அமையும்” என்று குயினஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் முன்னாள் சட்டப் பேராசிரியரான சூரி ரத்னபால கூறியிருக்கிறார்.

“கோட்டா வீட்டுக்குப் போ” என்ற என்ற கவர்மொழியுடன் நாடு பூராவும் இடம்பெறுகின்ற மக்கள் போராட்ட இயக்கம் இரு பிரதான இலக்குகளைக் கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பதவியில் இருந்து அகற்றி விட்டு எதேச்சாதிகார ஆட்சிமுறைக்கு பதிலாக ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிரான “தடுப்புக்களும் சமப்படுத்தல்களும்“ (Checks and Balances) கொண்ட -- மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஆட்சிமுறையை உருவாக்குவதே அந்த இலக்குகளாகும். 21வது திருத்தம் தற்போதைய வடிவில் நிறைவேற்றப் பட்டால் அந்த இலக்குகளை சாதிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்க அரசாங்கம் உடனடியாக எந்த நடவடிக்கையிலும் இறங்கும் சாத்தியமில்லை .

அது என்றென்றைக்குமே ஒழிக்கப்படாமலும் போகக்கூடும். ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஒரளவு குறைக்கப்படுவதுடன் இந்த அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் நின்றுபோய்விடவும் கூடும். ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கக்கூடாது என்ற தங்கள் வலியுறுத் தலை நியாயப் படுத்த இனவாத சக்திகள் அதை அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்துடன் முடிச்சுப் போடுகிறார்கள்.

மாகாணசபைகள் கூடுதல் அதிகாரங்களை கேட்கமுடியாது என்ற நிலை உத்தரவாதப்படுத்தப்பட்ட பின்னரே ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது குறித்து பரிசீலிக்கவேண்டும் என்பது அவர்களது வாதம்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் மக்களிடம் சர்வஜனவாக்கெடுப்பொன்றில் அங்கீகாரமும் பெறப்படவேண்டும். அதனாலேயே பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிக்க 21வது திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்பது அதை ஆதரிப்போரின் வாதமாக இருக்கிறது. ஆனால் மக்களின் அங்கீகாரத்தை பெறுவதற்கு தற்போதைய தருணத்தை விட சிறப்பான தருணம் கிடையாது.

பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதுதான் மெய்யான நோக்கமாக இருந்தால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் சாத்தியமானளவு கூடுதல் பட்சம் குறைக்கப்படவேண்டும்.ஆனால் புதிய திருத்த வரைவு அந்த நோக்கத்தை நிறைவுசெயயப் போதுமானதல்ல.

எது எவ்வாறிருப்பினும், பொருளாதார அனர்த்ததினால் திணறிக் கொண்டிருக்கும் நாட்டு மக்களின் கிளர்ச்சியை நீர்த்துப் போகச் செய்வதற்கான “ திசைதிருப்பல்” தந்திரோபாயமாக 21வது திருத்தம் அமைந்துவிடக் கூடாது. நிறைவேற்று அதிகார ஜனாதி பதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற இன்றைய வெகு ஜனக் கோரிக் கைக்கு எதிரான கேடயமாகவும் இந்த திருத்தம் அமைந்துவிடக் கூடாது.

ஏனென்றால், 20 மாதங்களுக்கு முன்னர் 19வது திருத்தத்தை இல்லாமல் செய்து 20 வது திருத்தத்தை கொண்டு வந்து மட்டுமீறிய அதிகாரங்களை தனதாக்கிக்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எந்த முயற்சியையும் ஆதரிக்கத்தயாராயிருப்பதாக கூற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிற அளவுக்கு அந்த ஆட்சிமுறைக்கு எதிராக உணர்வுகள் மக்கள் மத்தியில் முன்னென்றும் இல்லாதளவுக்கு உத்வேகம் பெற்றிருக்கின்றன.

# லண்டனில் இலங்கையின் மலையக இலக்கிய மாநாடு




லண்டனில், ‘கூலித் தமிழ்’, ‘மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ. சந்திரசேகரம்’ ஆகிய நூல் வெளியீடுகளைத் தொடர்ந்து, மலையகம் குறித்த இந் நிகழ்வுகளின் உச்ச கட்ட வளர்ச்சியின் வெளிப்பாடாக இம் மாதம் 11ஆம் திகதி விம்பம் அமைப்பு ஒழுங்கு செய்திருக்கும் முழுநாள் மலையக இலக்கிய மாநாடு திகழ்கிறது.

காத்தாயி, கோகிலம் சுப்பையா, இர. சிவலிங்கம், சோ. சந்திரசேகரம் சி. வி. வேலுப்பிள்ளை, தமிழோவியன், சாரல்நாடன் ஆகியோரின் நினைவரங்குகளில், மலையகம் சார்ந்த 26 நூல்கள் அறிமுகம் பெறுகின்றன. நாவல், சிறுகதை, கவிதை, கூத்து, அரசியல், சமூகவியல், சட்டம் சார்ந்த பல்துறை நூல்கள் இந்த மாநாட்டில் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

ந. சரவணன், க. ஆதவன், கரவைதாசன், சுகன், டாக்டர் தம்பிராஜா, யமுனா ராஜேந்திரன், வழக்கறிஞர் செ. சிறிக்கந்தராசா, வி. சிவலிங்கம், பால சுகுமார், ப. சந்தோஷ், எஸ். தினேஷ்குமார், எம். என். எம். அனஸ், எம். பெளசர், ராகவன், பெ. சிவஞானம் , மயூரன், மாதவி சிவலீலன், நவஜோதி யோகரட்னம், தோழர் வேலு, கோகுலரூபன், நா. சபேசன், மாஜிதா, அஞ்சனா, பாரதி சிவராஜா, வேணி சதீஸ், பூங்கோதை, மீனாள் நித்தியானந்தன் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து அணி சேர்க்கிறார்கள்.

சி .வி. வேலுப்பிள்ளையின் ‘மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்‘ என்ற நூல் வெளியீடு இம்மாநாட்டின் பிரதான நிகழ்வாக அமைகிறது. சி. வி. யின் இக்கட்டுரைகள் தினகரனில் வெளியாகி, 65 ஆண்டுகள் கடந்த நிலையில், மு.நித்தியானந்தன், எச். எச். விக்ரமசிங்க ஆகியோர் இந்த நூலைப் பதிப்பித்துள்ளனர்.

சாம் பிரதீபனின் ‘மெய்வெளி’ நாடக அரங்கின் தயாரிப்பில் ‘காத்தாயி காதை’ நாடகம் மாநாட்டின் முக்கிய கலை நிகழ்வாக மேடையேறுகிறது.

மலையகச் சிறார்களின் ஓவியக் கண்காட்சியும் மலையக நூல், சஞ்சிகைகள் கண்காட்சியும் இம்மாநாட்டின் மற்றுமிரு முக்கிய அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன.

இலங்கையிலிருந்து மலையக இலக்கிய செயற்பாட்டாளர் எச். எச். விக்ரமசிங்க பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாநாட்டைச் சிறப்பிக்கவிருக்கிறார்.

ஓவியர் கே. கே. ராஜா, ‘விம்பம்’ அமைப்பின் சார்பில் மாநாட்டு நிகழ்சிகளை ஒருங்கிணைத்து வழங்குகிறார்.

# ரணில் - பசில் மோதலுக்கு நடுவே

# கோட்டாவின் நிறைவேற்று அதிகாரத்தை கண்டறிய முனைகிறது நீதித்துறை!

**பனங்காட்டான்**

ஒன்றுக்கொன்று சோடி சேர முடியாத இரண்டு மாடுகள், ஒற்றைத் திருக்கல் வண்டியை இழுத்தால் எப்படியிருக்குமோ, அப்படித்தான் இலங்கையின் அரச சக்கரம் உருளுகிறது என்று கடந்த வாரம் இப்பத்தியில் குறிப்பிடப்பட்டது.

ஆனால், சமகால அரசியல் செயற்பாடுகளால் அதனைத் திருத்திக் கூற வேண்டும்போல தெரிகிறது. மூன்று மாடுகள் அல்லது அதற்கும் மேலானவை அரச யந்திரத்தை அந்தப்பக்கம் இந்தப்பக்கம் என்று இழுக்க ஆரம்பித்துள்ளன.

இதன் மறுபுறத்தில் இலங்கையின் நீதித்துறை சற்று உசாரடைந்து - நீதி என்பது நீதியாக இடம்பெற வேண்டுமென்று முயற்சி எடுப்பதுபோல காணப்படுகிறது. இதற்கு உதாரணமாக கடந்த நாட்களில் வழங்கப்பட்ட சில நீதிமன்றத் தீர்ப்புகளையும் அதையொட்டிய அரசியல் நடவடிக்கைகளையும் பார்க்கலாம்.

மே மாதம் 9ம் திகதி கொழும்பில் வன்முறையற்ற போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது மகிந்த ஆதரவாளர்கள் நடத்திய காட்டுமிராண்டித் தாக்குதலை தடுக்கத் தவறிய கொழும்புப் பிரதேச மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்த தென்னக்கோனை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருக்க வேண்டியவரை ஏதோ பாவம் பார்த்துப்போலும் இடமாற்ற உத்தரவு மட்டும் பிறப்பிக்கப்பட்டது. கோட்டாபயவின் வலதுகரமான இவர் இதுவரை இடமாற்றம் செய்யப்படவில்லை. ஆனால், இரண்டு வார விடுப்பில் இவர் சென்றுள்ளார். சில சமயம், அடுத்த சில வாரங்களில் ஒரு நோயாளியாக மாறி மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டாலும் ஆச்சரியப்பட வேண்டிவராது.

அடுத்த விடயம் - முன்னாள் எம்.பி.யும் தற்போது வீடமைப்பு அதிகார சபையின் தலைவராகவிருக்கும் துமிந்த சில்வா சம்பந்தப்பட்டது. 2011ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8ம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நாளன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாகக் கைதான துமிந்த சில்வாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இதன் மேன்முறையீட்டிலும் இது ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 2018ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ம் திகதி மூன்று நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்பை உதாசீனம் செய்யும் வகையில், கடந்த ஆண்டு 2021 யூன் மாதம் 21ம் திகதி, பொசன் தினத்தன்று கோட்டாபயவின் ஜனாதிபதி பொதுமன்னிப்பில் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

நீதிமன்றத்தை மீண்டும் அவமானப்படுத்தும் வகையில் துமிந்த சில்வாவுக்கு அரச உயர்பதவி வழங்கப்பட்டது. இன்னும் சில காலம் போயிருந்தால் அவரை தேசிய பட்டியல் ஊடாக எம்.பியாக்கி அமைச்சர் பதவியையும் கோதபாய வழங்கியிருப்பார்.

ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்றெல்லா அதிகாரங்களும் நிறைவேற்று ஜனாதிபதிக்கு உண்டு என்று அன்றொரு நாள் ஜே.ஆர். ஜெயவர்த்தன சொன்னதை நம்பி அதற்கு செயல் வடிவம் கொடுத்த கோட்டாபயவின் முடிவு இப்போது கேள்விக்குறியாகியுள்ளது.



ரணில் சமர்ப்பித்துள்ள 21வது அரசியல் திருத்த வரைபு, ஜனாதிபதி கோட்டாவின் அதிகாரத்தை நறுக்கவில்லை. மாறாக, பசிலின் பதவியை இலக்கு வைப்பதால் ரணில் – பசில் மோதல் ஆரம்பித்துள்ளது. சமவேளையில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார பலத்தை துமிந்த சில்வா தீர்ப்பினூடாக கண்டறிய முனைகிறது நீதித்துறை. எதிர்பாராத சவால் இது.

துமிந்த சில்வாவின் பொதுமன்னிப்பு விடுதலைக்கு இடைக்கால தடை விதித்துள்ள உயர்நீதிமன்றம் அவரை உடனடியாக கைது செய்யுமாறும், அவரின் கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டதுடன், இந்த வழக்கு விசாரணையை ஒரேயடியாக செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைத்துள்ளது.

வழமைபோன்று துமிந்த சில்வா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். வலிப்பு நோய் காரணமென்று கூறப்படுகிறது. மரண தண்டனை பெற்ற காலத்திலும் பல மாதங்கள் இப்படித்தான் மருத்துவமனையில் கழித்தவர் இவர்.

மே மாதம் 9ம் திகதிய அசம்பாவிதங்கள் தொடர்பாக மகிந்த ராஜபக்சவுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்த நீதிமன்றம் அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டது. ஆனால் இன்னமும் அவர் அதனைச் செய்யவில்லை. ராஜபக்ச குடும்ப அரசியல் அவருக்குத் துணை நிற்கிறது.

ஜனாதிபதி அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட நீதிமன்று விவகாரங்கள் பரிசீலிக்கப்படும் வகையில் இவ்வாறு விரிவடைந்து கொண்டிருக்கையில், அரசியல் விவகாரம் மறுதரப்பில் சூடுபிடித்து வருகிறது.

அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதி என்றாலும், ஆட்சி நடத்தும் பொதுபல சேனவின் தலைவர் பசில் ராஜபக்சவாக இருப்பதால், பிரதமர் என்ற ரீதியில் ரணில் சமர்ப்பித்த 21வது திருத்த வரைவு நாடாளுமன்றம் வருமா அல்லது கிடப்புக்குப் போகுமா என்பது தெரியாதுள்ளது.

21ம் அரசியல் திருத்தத்தில் 19ம் திருத்தம் சரியாக இணைக்கப்படவில்லையென்றும், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படவில்லையென்றும், மக்கள் கோரிக்கைக்கு மதிப்பளிக்கப்படவில்லையென்றும் ஒருபுறத்தே குரல் எழுப்பப்படுகிறது. தமிழர் தரப்பின் ஒரு பகுதியினரும் இதற்குள் அடக்கம்.

இப்போதைக்கு இது போதும், படிப்படியாக மிகுதி விடயங்களை ஏற்படுத்தி கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்பலாம் என எண்ணும் சில அரசியல்வாதிகளும் அவர்களின் கட்சிகளும் 21வது வரைபை ஆதரிக்கின்றன. எவ்வகையிலாவது இதனை நிறைவேற்றிவிட வேண்டுமென்பதில் இவர்கள் முனைப்பாக உள்ளனர். இவர்களுள் சிலர் தங்கள் கட்சிகளின் முடிவுகளையும் மீறி அமைச்சர் பதவிகளை பெற்று விட்டனர்.



மொட்டுக் கட்சியென பொதுவாக அழைக்கப்படும் பொதுஜன பெரமுன 21வது திருத்தததை நிறைவேற்ற அனுமதிக்காது என பகிரங்கமாக அறிவித்துள்ளது. இந்த அணிக்குத் தலைமை தாங்குபவர் பசில் ராஜபக்ச.

21வது திருத்தத்தை நாடாளுமன்றில் தோற்கடிப்பதன் வாயிலாக ரணிலை பிரதமர் பதவியிலிருந்து கழற்றிவிடலாமென்ற வழித்தடத்தில் காரியங்களை மேற்கொண்டு வருகிறார் பசில்.

21ம் திருத்தத்தை தாம் ஆதரிப்பதாக தெரிவித்து வரும் கோட்டாபய, இது நாடாளுமன்றதில் சமர்ப்பிக்கப்படும் என்றும் இதனை பொதுஜன பெரமுன ஆதரிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். இவர் பொதுஜன பெரமுனவின் அங்கத்தவர் அல்லர் என்றும், இவரால் எவ்வாறு ஆதரவு வழங்குமாறு தங்களை வலியுறுத்த முடியுமென்றும் பெரமுன வுக்குள்ளிருந்து குரல்கள் கேட்கின்றன.

ரணிலை கோட்டாபயவின் ஆள் என்றும் அவரை பிரதமராக்கியது கோட்டாபயவின் தனிப்பட்ட முடிவு என்றும் கூறிவரும் பெரமுனகாரர்கள், கோட்டாபயவின் கதிரையில் பசிலை அமர்த்தவும் தயாராகி வருகின்றனர். கோட்டாபயவினால் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் பதவி வழங்கப்பட்டு, பின்னர் பதவி பறிக்கப்பட்ட கடற்படை முன்னாள் அதிகாரி சரத் வீரசேகரவே இப்போது கோட்டாபயவின் முதலாம் எதிரியாக மாறியுள்ளார்.

இந்த முனைப்புகளுக்கு வலுவூட்டும் வகையில் - ரணிலை பிரதமராக்கியது பொருளாதாரத்தை கட்டியெழுப்பவே தவிர அரசியலமைப்பை மாற்றுவதற்கல்ல என்று பெரமுனவின் செயலாளர் சாகர காரியவாசம் கூறியிருப்பது இக்கட்டத்தில் கூர்மையான கவனத்துக்குரியது.

இதற்கு சுடச்சுட பதிலளித்துள்ளார் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவரான றுவான் விஜேவர்த்தன. பொருளாதார உதவிகளை சர்வதேசத்திடம் பெறுவதற்கு அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காகவே அரசியல் திருத்தம் கொண்டுவரப்பட்டது என்பது றுவானின் வாதம். ரணிலின் மைத்துனரே றுவான் (தாயாரின் சகோதரரின் புதல்வர்) என்பது நினைவிற் கொள்ளப்பட வேண்டியது.

21வது அரசியல் திருத்த வரைபில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு பதிலளித்துள்ள பிரதமர் ரணில், இவ்விடயத்தை அரசியல் கட்சிகளின் தலைவர்களே தீர்மானிக்க வேண்டுமென்று கூறி தமது காலுக்குள் இருந்த பந்தை ஒரேயடியாக எதிர்த்தரப்புக்கு அடித்து விட்டார்.

மகிந்தவின் பிரதமர் பதவி துறப்பு, ராஜபக்ச குடும்பத்தினரை அமைச்சுப் பதவிகளிலிருந்து முழுமையாக நீக்கியது, பல கட்சிகளின் எம்.பிக்களை அமைச்சர்களாக நியமிப்பது, அமைச்சுகளின் செயலாளர்களை புதிதாக நியமிப்பது, உயர்பதவிகளுக்கு தாமே நியமித்த படைத்துறை அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்புவது என்ற எல்லாவற்றுக்கும் மூலகாரணம் என்ன?

கோட்டா கோ ஹோம் என்ற போராட்டமே. ஐம்பது நாட்களைக் கடந்தும் போராட்டம் தொடர்கிறது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மேற்கொண்ட போராட்டக்காரர்கள் யாழ்ப்பாண பொதுநூலக எரிப்பு நாளை நினைவு கூர்ந்துள்ளனர். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய ஒருவராகவே ரணிலை இவர்கள் பார்ப்பதால், கோரிக்கைகளை நிறைவேற்ற அவருக்கு ஆறு மாத அவகாசம் வழங்கியுள்ளனர்.

ஒருபுறத்தே கோட்டாபயவின் நம்பிக்கைக்குரியவராகவும்(?) மறுபுறத்தே போராட்டக்காரர்களின் நம்பிக்கையீனத்துக்கு உட்படாதவராகவும் இதுவரை தம்மை அடையாளப்படுத்தி நிற்கும் ரணிலை விரைவாக பிரதமர் பதவியிலிருந்து நீக்குவதே பசில் தலைமையிலான பெரமுனவின் பிரதான இலக்காக உள்ளது.

அதேசமயம், இலங்கையின் நீதித்துறை ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் எந்தளவானது என்பதை கண்டுபிடிப்பதில் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. இது ஒரு விசப்பரீட்சைதான்.

இவை எல்லாவற்றையும் திசை திருப்பும் செயற்பாடுகளில் இறங்கிச் செயற்படும் பசிலை அரசியலிலிருந்து வெளியேற்ற கோ ஹோம் என்று போராட்டக்காரர்கள் இதுவரை ஏன் கேட்கவில்லை. ஆழமாக இதனை சிந்தித்துப் பார்த்தால், கொரோனா போன்ற கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒன்று இலங்கை அரசியலில் கண்ணாமூச்சி விளையாட்டுக் காட்டுவதுபோல தெரிகிறது.

# கச்சதீவு: ஓயாது தொடரும் பிரச்னை!

## கச்சதீவு...!

இலங்கை – இந்தியாவின் அரசியல்வாதிகளை பொறுத்தவரை அது வாக்கு வங்கிக்கான ஒரு மகுடிச் சொல். ஆனால், இலங்கை – இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கான உயிர்நாடி.

இந்தக் கச்சதீவு, 1974, 1976ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட உடன் படிக்கைகள் மூலம் இலங்கைக்கு முழுஉரித்தானது. ஆனாலும், கச்சதீவில் தமக்கு உரிமை உண்டு என்று தமிழக அரசும் – மீனவர்களும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த விடயத்தில் காலத்துக்கு காலம் இந்திய மத்திய அரசுக்கு எதிராக வழக்கும் தொடுத்து வருகின்றன.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து அதிலிருந்து மீண்டும் எழமுடியாது தவித்து வரும் இலங்கைக்கு இந்திய அரசு மட்டுமின்றி தமிழக அரசும் உதவி களை வழங்கி வருகின்றது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கச்ச தீவை மீண்டும் மீட்டுவிட வேண் டும் என்று தமிழக அரசு இந்திய மத்திய அரசை கோரியுள்ளது.

அண்மையில் தமிழகம் வந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யிடம் தமிழக முதலமைச்சர் "கச்ச தீவை மீட்க இதுவே தருணம்", என்று வலியுறுத்தியிருந்தார். இதைத் தொடர்ந்து தற்போது, தமிழகத்தின் முக்கிய கட்சிகளில் ஒன்றான தே.மு.தி.கவும் இலங்கையை மீட்க இது தருணம். அதனை இந்திய அரசு நிறைவேற்றவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த நிலையில் கச்சதீவு மீதான தமது இருப்பை நிலைநிறுத்த வேண்டும் இது இலங்கை தமிழர்களுக் கான உரிமை என்று நமது தமிழ் அரசியல் கட்சிகளும் வலியுறுத்து கின்றன. எனினும், கச்சதீவு விவகா ரத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி உள்ளிட்ட சில கட்சிகள் மதில் மேல் பூனையாக நடக்கின்றன. மீனவர்களின் கருத்தை அறிந்தே தமது முடிவை அறிவிப்போம் என்று அவர்கள் நழுவி வருகின்றனர்.

இந்த நிலையில், கச்சதீவு உரிமை குறித்து மனம் திறக்கிறார்கள் யாழ்ப்பாணத்தின் மீனவர் பிரதிநிதிகள் சிலர்...!

## கச்சதீவு வரலாறு

கச்சதீவு 285 ஏக்கர் பரப்பளவு கொண்ட தீவாகும். இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்தத் தீவில் பொதுமக்கள் வசிப்பதற்கு அனுமதி இல்லை. மீனவர்கள் ஓய்வெடுக்கவும், வலைகளை உலரவிடவும் இந்தத் தீவு பயன்படுகின்றது.

இந்தத் தீவு 1600களில் தமிழ் நாட்டின் மதுரை நாயக்க மன்னர்களின் கீழ் ஆட்சி செய்த சேதுபதி அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இந்தத் தீவு பிற்காலத்தில் ஆங்கிலேயரின் ஆளுகைக்கு கீழ் வந்தது.

அவர்களின் ஆட்சிக் காலத்தில் இருந்தபோதே - 1920களிலேயே இந்தத் தீவு யாருக்கு உரியது என்பதில் சர்ச்சை எழுந்தது. அப்போது, பிரிட்டிஷ் இந்தியாவின் - தென்னிந்திய ஆட்சி தலைநகரமாக இருந்த மெட்ராஸ் (இன்றைய சென்னை) அரசும் சிலோன் (இலங்கை) அரசும் உரிமை கொண்டாடின. எனினும், 1921இல் பிரிட்டிஷ் இந்தியாவின் ஆளுகைக்கு கச்சதீவு உட்பட சிலோன் அரசு சம்மதித்தது.

இந்தியா, இலங்கை பிரிட்டிஷிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் இந்தியா வசமே கச்சதீவு இருந்தது. எனினும், இலங்கை கச்சதீவை தொடர்ச்சியாகக் கோரி வந்தது. 1972இல் பிரதமராகப் பதவியேற்ற ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முன்னெடுத்த இராஜதந்திர நடவடிக்கை - மற்றும் இந்திய பிரதமராக இருந்த இந்திரா காந்தியுடனான நட்பின் நிமித்தம் 1974இலும் 1976இலும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்கு உரித்தானது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்த செய்யப்பட்ட நாளிலிருந்து 10 வருடங்கள் மீன் பிடி உரிமையை இந்திய மீனவர்களும் கொண்டிருப்பர். அதன் பின்னர், மீனவர்கள் வலைகளை உலர விடவும், அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடற்றவும் அனுமதிக்கப்படுவதுடன் கச்சதீவுக்கு அவர்கள் வருவதற்கு கடவுச் சீட்டு உள்ளிட்டவற்றை கோருவதில்லை என்ற நிபந்தனைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

ஆனால், இந்திய அரசாங்கம் இலங்கைக்கு கச்சதீவை வழங்கிய போதும், தமிழ்நாட்டு அரசாங்கமும் - மீனவர்களும் தொடர்ச்சியாக கச்சதீவின் மீதான தமது உரிமையை வலியுறுத்தி வந்தனர்.

எனினும், இந்திய மத்திய அரசாங்கம் கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது என்பதில் தெளிவாக இருந்து வருகின்றது. கச்சதீவு குறித்த வழக்கு விசாரணைகளிலும் இந்த விடயத்தையே கூறிவருகிறது.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்
எஸ். தில்லைநாதன்

## வடக்கையும் இந்தியாவிடம் வழங்குங்கள்

ஜுலியன் சக்காராஜா
தலைவர், குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கம்



தமிழக முதல்வரின் கோரிக்கையை ஏற்று கச்சதீவை தமிழ்நாட்டு அரசுக்கு வழங்குமாக இருந்தால் - வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து கடற்றொழிலாளர்களும் முற்றுமுழுதாக பாதிக்கப்படுவார்கள். அனுமதியின்றியே தமிழ்நாட்டு மீனவர்கள் எங்களின் வடக்கு கடல் முழுவதும் தொழில் செய்கிறார்கள்.

இதனால் எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பணவீக்கம் போன்ற விடயங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி இலங்கைக்கு உதவுவதாக கூறிக் கொண்டு இலங்கையின் கடல்வளத்தை சூறையாட முனைகின்றார்கள்.

1983ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இந்திய - இலங்கை கடற்பரப்புக்குள் நாங்கள் சுதந்திரமாக தொழில் செய்து வந்தோம். ஆனால், யுத்தத்துக்கு பிற்பாடு நாங்கள் இந்திய கடல் எல்லையை கடக்க முடியாத ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. நாங்கள் எல்லை தாண்டினால் கைது செய்யப்படுவோம். ஆனால், இந்திய மீனவர்கள் சுதந்திரமாக வந்து இலங்கை கடற்பரப்புக்குள் தொழில் செய்கின்றனர். நமது கடற்படை அவர்களை தடுக்க முயன்று கைது செய்வார்கள். ஆனால், இந்தியாவில் எழுகின்ற போராட்டங்கள் காரணமாக இலங்கை கடற்படையின் நடவடிக்கைகள் முற்றுமுழுதாக தடுக்கப்படுகின்றது.

ஆனால், இலங்கை கடற்படையை பொறுத்தவரை இலங்கை - இந்திய அரசுகளின் அழுத்ததோடு இந்திய மீனவர்களின் வருகையைத் தடுக்கக் கூடிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் 99 வருட குத்தகைக்கு கச்சதீவை தமிழ்நாட்டுக்கு வழங்குவதாக இருந்தால் ஒட்டுமொத்த வட மாகாணத்தையும் இந்தியாவுக்கு வழங்கலாம். ஏனென்றால், வடக்கு மக்கள் கடற்தொழிலில் ஈடுபடுவதற்குரிய சூழ்நிலை அற்றுப் போய்விடும்.

தமிழ்நாட்டு கரையோரப் பகுதிகள் இந்திய இழுவைப் படகுகளால் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தமது கடல் வளத்தை அழித்து விட்டு இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து முற்றுமுழுதாக அழிக்க திட்டமிடுகிறார்கள். இது உடனடியாக தடுக்கப்பட வேண்டும்.

கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார் கச்சதீவை நாங்கள் ஒருபோதும் வழங்க மாட்டோம் என்று. ஆனால், சுமந்திரன் கூறுகிறார் அது இரு நாட்டுப் பிரச்னை ராஜதந்திர ரீதியில் அவர்கள் அதற்கு தீர்வு காண்பார்கள் என்று. ஆனால், இதன் உண்மைத்தன்மை சில அரசியல்வாதிகளுக்கு தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

கச்சத்தீவு இந்தியாவுக்கு வழங்கப்படப் போகிறதென்று. ஆனால், இந்தியாவுக்கு கச்சதீவு வழங்கப்படுமாக இருந்தால் வட பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றுமுழுதாக பாதிக்கப்படும்.

(18 ஆம் பக்கம் பார்க்க....)

## மனிதாபிமானமற்ற செயல்

உதயகுமார் பரமேஸ்வரன்,
கடற்றொழிலாளி,
சுப்பர்மடம் -பருத்தித்துறை.



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் கடந்த காலங்களில் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரண சொத்துகளையும் - தொழிலையும் இழந்து நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்திய மீனவர்கள் அத்துமீறல்களால் நாம் தொழில்களை இழந்துள்ளோம். இந்நிலையில், எமக்கு உணவுப் பொதிகளைத் தந்து விட்டு கச்சதீவை கேட்பது எவ்வளவு மோசமான விடயம்.

கச்சதீவு எமது கடல் பரப்புக்குள் அமைந்துள்ளது. அந்தச் சூழல் எமது மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்யும் கடற்பரப்பு. கச்சதீவை இந்தியாவுக்கு வழங்கினால் இந்திய மீனவர்கள் அங்கேயே வாடி அமைத்து வடக்கின் கடற்பரப்பை ஆக்கிரமித்து கடற்றொழிலை மேற்கொள்வார்கள். இதனால் ஏற்கனவே வாழ்வாதாரத்தை இழந்த யாழ். மாவட்ட மீனவர்கள் தொழி லின்றி நிர்க்கதியான நிலையைத்தான் எதிர்கொள்ள வேண்டி வரும்.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட இந்த நிலையில் எமக்கு உணவுப் பொதிகளைத் தந்துவிட்டு, கச்சதீவை பெற்று அவர்களது அத்துமீறல்களுக்கு உறுதியான - நிலையான தளத்தை ஏற்படுத்தப் பார்கிறார்கள்.

இது மனிதாபிமானமற்றது. வறுமையில் வாடும் போது உணவுப் பொதிகளை தந்தது போல, எங்கள் தொழிலை இந்திய அரசே பாதுகாத்து தர வேண்டும். கச்சதீவு எமக்குச் சொந்தமானது. அதனை விட்டுக் கொடுத்தால் எங்கள் மீனவர்களின் வாழ்வாதாரதம் நாசமாகிவிடும்.

## கச்சதீவை காப்பாற்ற வேண்டும்!



அலெக்ஸ் போல்,
மீன் ஏற்றுமதியாளர், பருத்தித்துறை.

கச்சதீவை இந்தியாவுக்கு வழங்குவதானால் அது எமது மீனவர்களுக்கு தற்கொலைக்கு ஒப்பானது. இப்போதே தினமும் ஆயிரக்கணக்கான இந்திய ட்றோலர்கள் வடக்கு கடலில் மீன்பிடித்து எமது மீனவர்களை வாழவிடாமல் தடுத்து வரு கின்றன.

இந்திய மீனவர்களுக்கு இங்கு தளம் இல்லை. கச்சதீவை வழங்கினால் அது அவர்களுக்கு தளமாகிவிடும் அங்கு நூற்றுக் கணக்கான வாடிகளை அமைத்து அவர்கள் எமது வட கடலை சூறையாடு வார்கள். அவர்களிடம் நவீன இயந்திர மீன்பிடிப் படகுகள் உள்ளன. அவற் றின் மூலம் எமது கடலில் மீன்கள் உள்ள பவளப்பாறைகளைக் கண்டுபிடித்து முழு மீன்களையும் எடுத்துவிடுவார்கள். எமது மீனவர்கள் இன்னமும் நவீனத் துக்குள் நுழையவில்லை. பழைய முறைகளிலேயே மீன்பிடித்து வருகிறார்கள். இந்நிலையில், எமது மீனவர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து விடுவார்கள்.

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு வரையறை உண்டு. எமது நாட்டுக்கும் அது இருக்கிறது. எமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி கச்சதீவை தமக்குத் தருமாறு கேட்பது எமது மீனவர் சமுதாயத்தை அழிக்கும் செயலாகும். கச்சதீவை இந்தியா திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக் கையை தமிழக முதல்வர் ஸ்டாலின் அரசியலுக்காகத் தெரிவித்தாரோ தெரியாது. கச்சதீவைக் காப்பாற்ற எமது மீனவர் சமுதாயம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். காலப் போக்கில் எமக்குரிய பதில் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

# அஜித்தின் சம்பளம் எவ்வளவு?



அஜித் - 62 படத்தில் நடிகர் அஜித்துக்கு சம்பளமாக 105 கோடி இந்திய ரூபாய் பேசப்பட்டுள்ளது. இந்தத் தகவலை அந்தப் படத்தைத் தயாரிக்கும் லைகா நிறுவனம் உறுதி செய்துவிட்டது.

முதலில் அவருக்காக 100 கோடி இந்திய ரூபாய் வழங்கவே லைகா நிறுவனம் தயாராக இருந்தது என்றும் எனினும், அஜித் 105 கோடி இந்திய ரூபாய் என்பதில் உறு தியாக இருந்தார் எனவும் இத னால், அவர் கேட்கும் தொகையை அப்படியே கொடுக்க லைகா நிறுவனத்தின் பணிப்பாளர் கூறியுள்ளாராம்.

# சூர்யாவின் படம் வெளியீடு?



எஸ். ஜே.சூர்யா நடித்துள்ள "கடமையை செய்" படத்தின் வெளியீட்டு திகதியை படக்குழு அறிவித்துள்ளது.

இயக்குநர் எஸ். ஜே. சூர்யா இப்போது நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார். நாயகன் மற்றும் வில்லன் வேடங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில் அவர் நடித்துள்ள, 'கடமையை செய்' படம் எதிர்வரும் 24ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்படத்தில், யாஷிகா ஆனந்த் நாயகியாக நடித்துள்ளார். இவர்களுடன் ராஜேந்திரன், சார்லஸ் வினோத், வின்செண்ட் அசோகன், இராஜசிம்மன், மோகன் வைத்யா உட்பட பலர் நடித்துள்ளனர்.

# பயமே காரணம்!

ஒரே வீட்டில் தனது காதலருடன் வசித்து வந்தாலும் இன்னும் திருமணம் செய்து கொள்ளாதது ஏன்? என்பது குறித்து நடிகை ஸ்ருதிஹாசன் பதிலளித்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசனின் மகளும் நடிகையுமான ஸ்ருதிஹாசன். இவர், முன்பு வேறொருவருடன் காதலில் இருந்தவர் அந்த காதல் முறிவுக்கு பிறகு இப்போது சாந்தனு என்பவருடன் லிவிங் ரூ கெதரில் தனது மும்பை வீட்டில் வசித்து வருகிறார். 'ஒரே வீட்டில் இருந்தும் ஏன் இருவரும் இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை?' என்று கேட்கப் பட்ட கேள்விக்கு ஸ்ருதி பதிலளித்துள்ளார்.

'நான் எங்கு சென்றாலும் எனது திருமணம் குறித்தான கேள்விகள் வந்து கொண்டே தான் இருக்கும். உண்மையில், திருமணம் என்ற வார்த்தையில் எனக்கு பெரிதாக நம்பிக்கை இல்லை. பயம் மட்டுமே இருக்கிறது. அதனாலேயே, அந்த உறவுக்குள் நுழைய நான் அதிகம் யோசித்து வருகிறேன்" என்று கூறியிருக்கிறார்.





# பிக்பாஸில் சமந்தா!

இந்தியாவில் பிரபலமான நிகழ்ச்சிகளில் ஒன்றான பிக்பாஸ் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மலையாளம் என பல மொழிகளில் ஒளிப்பரப்பாகி வருகிறது.

தற்போது இந்த நிகழ்ச்சியை தமிழில் நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார். தெலுங்கில் ஒளிப்பரப்பாகி வரும் இந்த நிகழ்ச்சியை நாகார்ஜூனா தொகுத்து வழங்கி வருகிறார். இந்த நிகழ்ச்சியின் 6வது தொடர் விரைவில் தொடங்கவுள்ளது.

இந்நிலையில், படப்பிடிப்பு காரணமாக இந்தத் தொடரை நாகார்ஜூனா தொகுத்து வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அவருக்கு பதிலாக நடிகை சமந்தா இந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்க உள்ளாராம். இதற்கான பேச்சு நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.







# திரைப்படம் - விக்ரம்

**இயக்கம் - லோகேஷ் கனகராஜ்**
**இசை - அனிருத்**
**நடிப்பு - கமல்ஹாசன், விஜய் சேதுபதி, பகத் பாசில்**

1986 இல் வெளிவந்த "விக்ரம்" படத்தையும், 2019இல் வெளிவந்த "கைதி" படத்தையும் வைத்து, அந்த இரண்டு படங்களின் தொடர்ச்சியாக 2022இல் "விக்ரம்" என்ற ஒரு படத்தை இயக்க முடியுமா என வியக்க வைத்திருக்கிறார் இயக்குநர் லோகேஷ் கனகராஜ்.

தமிழ் திரையுலகில் இதுவரை உச்சக் காட்சியில்தான் நாயகனை அல்லது வில்லனை சாகடிப்பார்கள். ஆனால், இந்தப் படத்தில் படத்தின் நாயகன் கமல்ஹாசனை பட ஆரம்பத்திலேயே கொடூரமாகக் கொன்றுவிட்டு அதன் பிறகு படத்தை ஆரம்பிக்கிறார்கள். இந்த உண்மையான வித்தியாசத்தை கமல் ஹாசனால் மட்டுமே கொடுக்க முடியும்.

"மாநகரம், கைதி, மாஸ்டர்" என த்ரில்லர் கலந்த ஆக்ஷன் கதைகளைக் கொடுத்து தனக்கென தனிப் பாணியை உருவாக்கியவர் லோகேஷ் கனகராஜ் இந்த "விக்ரம்" படத்தில் தமிழ்த் திரையுல கில் தனது இடத்தை, தடத்தை மிக மிக அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார். இந்தப் படத்தை கமல் ஹாசன் படம் என்று சொல்வதை விட இயக்குநர் லோகேஷ் கனகராஜின் படம் என்று தாராளமாகச் சொல்லலாம். அதை கமல் ஹாசனும் ஏற்றுக் கொள்வார்.

பொலிஸ் அதிகாரிகளான ஹரிஷ் பெரடி, காளிதாஸ் ஜெயராம் ஆகிய இருவரையும், கமல் ஹாசனையும் முகமூடி அணிந்த கும்பல் ஒன்று கொலை செய்கிறது. பொலிஸ் அதிகாரிகள் கொலைகளைப் பற்றி விசாரிக்க மறைகரமாக வேலை செய்யும் பகத் பாசிலை அழைக்கிறார் பொலிஸ் அதிகாரி செம்பன் வினோத் ஜோஸ். அந்தக் கொலைகளுக்குப் பின்னணியில் 2 இலட்சம் கோடி மதிப்புள்ள போதைப் பொருளின் மூலப் பொருள் இருக்கிறது என்பதையும், அதன் பின் னணியில் விஜய் சேதுபதி இருக்கிறார் என்பதையும் தொடர்ந்து மேலும் சிலர் கொல்லப்பட லாம் என்பதையும் கண்டுபிடிக்கிறார் பகத் பாசில். முகமூடி அணிந்து கொலை செய்பவர்களை அவர் நெருங்கியபோது அவருக்கு அதிர்ச்சி ஒன்று காத்திருக்கிறது. அது என்ன?, அடுத்து என்ன?, என்பதுதான் படத்தின் பரபரப்பான மீதிக் கதை.

தமிழ் திரையுலகில் கடந்த சில வருடங்களில் இப்படி ஒரு திரைக்கதையைப் பார்த்திருப்போமா என்பது சந்தேகம்தான். அதிலும் படத்தில் கமல் ஹாசன், விஜய் சேதுபதி, பகத் பாசில் என திறமை யான மூன்று நடிகர்கள். மூவருக்கும் முக்கியத்துவம், அடுத்து என்ன என்ற எதிர்பார்ப்பு என மூன்று மணி நேரம் ஓடுவதே தெரியவில்லை. தமிழ் திரையுலகில் அதிரடி படங்களுக்கான ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியிருக்கிறார் இயக்குநர் லோகேஷ்.

கமல் ஹாசனுக்கு 60 வயதைக் கடந்துவிட்டது எந்த ஓர் இடத்திலும் சொல்ல முடியாது. தன் வயதுக்குரிய கதாபாத்திரத்தைத் தெரிவு செய்திருந்தாலும் அவரின் புத்துணர்ச்சி வேற லெவல். ஆரம்பத்தில் "பத்தல பத்தல" என்ற ஆட்டமென்ன, அடுத்தடுத்து அதிரடி செய்யும் சண்டை என்ன, எந்தெந்தக் காட்சிகளில் எப்படியெப்படி நடிக்க வேண்டும் என மிகப் பெரிய பாடமே இந்தப் படத்தில் மீண்டும் கொடுத்து விட்டார். சக நடிகர்களுக்கும் தன் படத்தில் சரியான இடத்தைக் கொடுத்து அவர் களையும் மிஞ்சும் விதத்தில் நடிப்பது கமல்ஹாசன் பாணி, அது இந்தப் படத்திலும் தொடர்கிறது.

"மாஸ்டர்" படத்தைத் தொடர்ந்து இந்தப் படத்திலும் வில்லனாக விஜய் சேதுபதி. அந்தப் படத்தின் நடிப்புச் சாயல் சற்றே இந்தப் படத்தில் தெரிந்தாலும், பேச்சிலும், உடல் மொழியிலும் வித்தியாசப்படுத்தி இருக்கிறார்.

படத்தின் முதல் பாதி வரை பகத் பாசில்தான் நாயகன். அவரை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் இயக்குநர். வழக்கை அவர் விசாரிக்கும் விதம், தனது குழுவினருக்கு இடும் கட்டளை, காதலி காயத்ரியுடனான கொஞ்சல் என இடைவேளை வரை கேரளாவில், ஒரு மலையாளப் படத்தைப் பார்த்து கொண்டிருக்கிறோமோ என்று யோசிக்க வைத்துவிட்டது.

மற்ற கதாபாத்திரங்களில் நரேனுக்கு மட்டுமே கொஞ்சம் அதிகமான காட்சிகள். பொலிஸ் அதிகாரி யாக செம்பன் வினோத் ஜோஸ், காவல் துறையில் ஒரு கறுப்பு ஆடு கதாபாத்திரம். உச்சக் காட்சியில் ஆச்சரியப்படுத்துவதாக சூர்யா. கொஞ்சமே வந்தாலும் எதிர்மறை கதாபாத்திரத்தில் தெறிக்க விடுகிறார். அவரின் கதாபாத்திரத்துடன் "கைதி 2" ஆக வருமா, "விக்ரம் 3" ஆக வருமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

படத்தில் விஜய் சேதுபதிக்கு 3 மனைவியர்கள். ஒரு மனைவியான மகேஸ்வரி ஓரிரு வார்த்தை வசனமும், மற்றொரு மனைவியான மைனா நந்தினி இரண்டு, மூன்று வசனமும், இன்னொரு மனை வியான ஷிவானி நாராயணன் வசனமே பேசாமலும் வந்து போகிறார்கள். எதற்காக இப்படி ஒரு 3 மனைவி நகைச்சுவை எனத் தெரியவில்லை. படத்தில் எது திருஷ்டி என்று கேட்டால் இந்தக் கதைதான். இது முழுக்க முழுக்க வர்த்தக திரைப்படம். பின்னணி இசைக்காக அனிருத் நிறையவே உழைத்திருக்கிறார். என்னதான் அனிருத் பின்னணி இசையமைத்தாலும் இடைவேளையில் இளையராஜா வின் இசையில் 36 வருடங்களுக்கு முன்பு ஒலித்த "விக்ரம்–விக்ரம்"...இசையைக் கேட்கும் போது புல்லரிக்கிறது.

ஒளிப்பதிவாளர் கிரிஷ் கங்காதரன். படத்தில் நிறைய இரவுக் காட்சிகள், பகல் காட்சிகளைப் பார்ப்பதே அரிது. அதிலும் நிறைய இரவு நேர வெளிப்புறக் காட்சிகள். ஒளியமைப்புக்கு அத்தனை மணி நேரம் தேவைப்பட்டிருக்கும். கடுமையாக உழைத்து கிரிஷ், கிரேட் என சொல்ல வைத்திருக்கிறார். அவருக்கடுத்து சண்டைப் பயிற்சி இயக்குநர்கள் அன்பறிவ்.



# புதிய வரலாற்றின் தொடக்கம்!

ஐ.பி.எல் 2022 தொடரை வென்றிருக்கிறது குஜராத் ரைட்டன்ஸ். ரசிகர்கள், விமர்சகர்கள் என ஒவ்வொருவராலும் புறக்கணிக்கப்பட்ட அந்த அணி, தங்கள் முதல் தொடரிலேயே வரலாறு படைத்திருக்கிறது.

பெப்ரவரி இரண்டாவது வாரம், ஐ. பி. எல் 2022 தொடருக்கான ஏலம் முடிந்தபோது குஜராத் ரைட்டன்ஸ் மீது பெரும் விமர்சனம் வைக்கப்பட்டது. 10 அணிகளிலேயே அதுதான் மிகவும் பலவீனமான அணி என்று கருதப்பட்டது. ரஷீத் கான், முகமது ஷமி, பெர்குசன் என பந்துவீச்சு பலமானதாக இருந்தாலும், துடுப்பாட்டம் சுமாராகவே இருந்தது. ஹார்திக் பாண்ட்யா, ஷப்மன் கில் தவிர்த்து நம்பிக்கை கொடுக்கக்கூடியவர்கள் யாரும் இருக்கவில்லை. இத்தனைக்கும் மேல், அந்த அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டிருந்தவர், அதுவரை பெரிய அனுபவம் கொண்டிராத ஹார்திக். ஆனால், எதெல்லாம் அவர்களின் எதிர்மறையாக பேசப்பட்டதோ, அதையெல்லாம் வைத்தே இந்தத் தொடரை வென்றது குஜராத். வென்று காட்டினார் அணித் தலைவர் ஹார்திக்!

இந்தத் தொடரில் பல அணிகள் தடுமாறக் காரணமாக இருந்தவர்கள் அந்த அணிகளின் தலைவர்கள்தான். ரவீந்திர ஜடேஜா, ரோஹித் ஷர்மா, கேன் வில்லியம்சன், மயங்க் அகர்வால் என அனைவருமே தங்கள் அணியின் காலை வாரினர். அதேசமயம், தன் அணியை முன்னால் நின்று வழிநடத்தினார் ஹார்திக்.

மூத்த வீரர்கள்மீது நம்பிக்கை வைத்தது, தைரியமான முடிவுகள் எடுத்தது என தலைமைத்துவத்தை சரியாக செய்திருக்கிறார் அவர். ‘இவர் அவ்வளவுதான்’ என அனைவராலும் கருதப்பட்ட டேவிட் மில்லரை தங்கள் அணியின் காவலரணாகப் பயன்படுத்தினார்.

நாணயச் சுழற்சியில் வென்ற ஒவ்வொரு அணித் தலைவரும் பந்துவீச்சையு தேர்வு செய்துகொண்டிருந்தபோது தைரியமாக முதல் ஆளாக துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார், ஆடுகளத்தின் தன்மை காரணமாக 10 கோடி ரூபாய் கொடுத்து எடுத்த பந்துவீச்சாளரையும் வெளியே அமர வைக்கவும் தயாராக இருந்தார்.

தலைமைத்துவம் மட்டுமல்லாமல் துடுப்பாட்டம், பந்துவீச்சு என அனைத்து ஏரியாவிலும் அணிக்குக் கைகொடுத்தார் ஹார்திக்.

> டோனி அடுத்த தொடரில் விளையாடுவார் என்பதே சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர் களுக்கு உற்சாகம். மகேஷ் தீக்ஷன, மதீஷா பத்திரண, முகேஷ் சௌத்ரி போன்ற வீரர்கள் நம்பிக்கையை விதைத்திருக்கிறார்கள். 2022 தொடர் என்றொன்று இருந்ததை முற்றிலுமாக மறந்துவிட்டு, பழைய சகல துறை வீரராக ஜடேஜா இணைந்தால் நிச்சயம் விசில் பறக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக மும்பை இந்தியன்ஸ/க்குப் பெரிதாக ஓட்டங்களை சேர்க்காத இவர்தான், குஜராத் ரைட்டன்ஸின் அதிக ஓட்டங்களை குவித்த வீரர். அணிக்குத் தேவை என மூன்றாவது, நான்கவது இடங்களிலும் ஆடினார். தன் பந்துவீச்சால் இறுதியாட்டத்தின் நாயகன் விருதையும் வென்று அசத்தினார். அதிர்ஷ்டம் கைகொடுக்கிறது என்று அவரே ஒருகட்டத்தில் சொல்லியிருந்தாலும், அந்த அதிர்ஷ்டத்தின் உருவமாக இருந்தது இவர்தான்!

ஹார்திக் மட்டுமல்ல, அந்த அணி நம்பிய ஒவ்வொரு வீரருமே அணியின் தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்தனர். ரித்திமான் சஹா, ஷப்மன் கில், டேவிட் மில்லர், ராகுல் தெவிட்டியா, யஷ் தயால், ஆர்.சாய்கிஷோர், அல்சாரி ஜோசப் என ஒவ்வொருவரும் நட்சத்திரங்களாக திகழ்ந்தனர். இந்த வீரர்கள்மீது அந்த அணி வைத்திருந்த நம்பிக்கை அசாத்தியமானது!

பல அணிகள் தங்கள் பலமான வீரர்களுக்காகவே பல கோடிகள் செலவு செய்தன. நான்கு கோடிக்கும் மேலாகச் செலவு செய்து எடுக்கப்பட்ட வீரர்கள் பலரும் வாங்கிலில் அமர்ந்திருந்தனர். ஆனால், குஜராத் அணியில் அப்படியில்லை. குறிப்பிட்ட சில வீரர்களின்மீது மட்டும் அதிகம் முதலீடு செய்துவிட்டு, மற்ற இடங்களை இருந்த தொகையை வைத்து நிரப்பியது. அதனால்தான், ஏலத்துக்குப் பிறகு அந்த அணியில் அதிக வீரர்கள் இல்லை, எல்லா இடங்களுக்கும் சரியான ஆள்கள் இல்லை என்ற விமர்சனங்கள் எழுந்தன.

ஆனால், நம்பிக்கை வைக்கப்பட்ட எல்லோருமே ஹிட் ஆகும்போது, பின்னணி எதற்கு? குஜராத் ரைட்டன்ஸ் அணியால் 3 கோடிக்கும் மேல் கொடுத்து எடுக்கப்பட்ட 9 வீரர்களுமே இறுதிப் போட்டியின் விளையாடும் பதினொருவர் அணியில் இடம் பெற்றிருந்தார்கள்.

இப்படி நம்பிக்கை வைத்த வீரர்கள் எல்லோருமே சிறப்பாக ஆடியது, இதுநாள் வரை தடுமாறிய வீரர்கள் ஒரே நேரத்தில் தங்கள் பழைய நிலைக்கு திரும்பியது என ஒன்பது கோள்களும் குஜராத் ரைட்டன்ஸூக்காக நேர்க்கோட்டில் நின்றன. அந்த அணியும், தங்கள் சொந்த மண்ணில் திரண்டிருந்த ஒரு இலட்சம் ரசிகர்களுக்கு மத்தியில் அந்தக் கோப்பையை உயர்த்திப் பிடித்திருக்கிறது.

ஒரு புதிய அணி சம்பியன் பட்டம் வென்றிருக்கும் இந்த தொடரில், 9 முறை ஐ. பி. எல் கோப்பையை வென்ற மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் கடைசி இரண்டு இடங்களைப் பிடித்து பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த ஏலத்தின்போது குஜராத்தைப் போல் இந்த இரு அணிகளும்கூட விமர்சனத்துக்குள்ளாகின. ஆனால், இவர்களால் குஜராத் போன்று சிறப்பாகச் செயல்பட முடியவில்லை. முக்கிய வீரர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர்களை முடக்கிவிட்டன. ஆனால், இந்த இரண்டு அணிகளுமே நம்பிக்கை தரக்கூடிய இளம் வீரர்களைக் கண்டெடுத்திருக்கின்றன.

திலக் வர்மா, ரமன்தீப் சிங், டிவால்ட் பிரெவிஸ் என அடுத்த தலைமுறைக்கான நட்சத்திரங்களைக் கண்டிருக்கிறது மும்பை இந்தியன்ஸ். டிம் டேவிட் மூலம் பொலார்டின் இடத்தை நிரப்பிவிட முடியும். ஜோப்ரா ஆர்ச்சர் போன்ற சிறப்பான நட்சத்திர வீரர் அடுத்த தொடரில் அணியில் இணையும்போது நிச்சயம் பலமடங்கு அந்த அணி பலம் பெறும்.

டோனி அடுத்த தொடரில் விளையாடுவார் என்பதே சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்களுக்கு உற்சாகம். மகேஷ் தீக்ஷன, மதீஷா பத்திரண, முகேஷ் சௌத்ரி போன்ற வீரர்கள் நம்பிக்கையை விதைத்திருக்கிறார்கள். 2022 தொடர் என்றொன்று இருந்ததை முற்றிலுமாக மறந்துவிட்டு, பழைய சகலதுறை வீரராக ஜடேஜா இணைந்தால் நிச்சயம் விசில் பறக்கும்.

அடுத்த தொடருக்கு முன்பு நடக்கும் சிறிய அதிரடிக்கு முன் இந்த இரு அணிகளும், ஏதோவொரு ஜாம்பவானை வெளியேற்றி விட்டு. புதிய சுப்பர் ஸ்டாரை ஒப்பந்தம் செய்யக்கூடும். நிச்சயம் ஒரு சம்பியன் அணியின் உத்வேகத்தோடு இந்த அணிகள் அடுத்த தொடரில் மீண்டு வரும். ஒரு மோசமான தொடருக்குப் பிறகு கோப்பையை வெல்வது இந்த அணிகளுக்குப் புதிதில்லை. 2023 ஐ. பி. எல் கோப்பையை டோனியோ, ரோஹித்தோ தூக்கினால் நாமும் ஆச்சரியப்படப் போவதில்லையே!

# செம்மணி படுகொலை:

## வரலாற்று சாட்சியப் பதிவுகளுடன் சிட்னியில் ஆங்கில நூல் வெளியீடு!

• ஐங்கரன் விக்கினேஸ்வரா

**யாழ்** சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு செம்மணியில் உயிரிழந்தது தொடர்பாக சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய "Schoolgirl Rape & Four Murders" எனும்நூல் சிட்னியில் வெளியிடப்படவுள்ளது.

1996 இல்செம்மணி படுகொலை தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

**வரலாற்றுச் சாட்சியம் :**

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமிற்குச் சென்ற தாயா ரான திருமதி இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினராற் படு கொலை செய்து புதைக்கப்பட்டனர்.

செம்மணி படுகொலை தொடர்பாக சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதியுள்ள நூலில், குடும்ப உறவினர்களின் சாட்சியங்கள் மற்றும் செம்மணியில் உள்ள குழிகளில் இருந்து உடல்களை தோண்டி எடுத்ததைத் தொடர்ந்து பிரதிவாதிகளின் வாக்குமூலங்கள் - இக்கொடூர நிகழ்வுகளின் வாக்கமூலங்களையும் பதிவு செய்துள்ளார்.

வரலாற்றுச் சாட்சியமாக வெளிவரும் இந்நூல் இன்று ஞாயிறு (05) சிட்னியில் வெளியிடப்படுகிறது,

**"சமாதானத்துக்கான போர்":**

"சமாதானத்துக்கான போர்" மூலம் இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக "மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன. 1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டுவந்தனர். இதன் பின் நடந்த கொடூர நிகழ்வுகளையே சிறி பகவன்தாஸ் எழுதிய இந்நூலில் வரலாற்று ஆவணமாக பதிவிட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா 1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப்பேற்ற பின், அவர் தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்காக காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட சூரியகந்த புதைகுழிகள் போன்ற பல புதைகுழிகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியதோடு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தியதாக காட்டிக்கொண்டது.

ஆயினும் "சமாதானத்திற்கான போர்" என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பத்தொண்ப தாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததை தொடர்ந்து போர் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய நூலில் 1996 நடுப்பகுதிக்குப்

புலம்பெயர் மடல்

பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்ததும், செம்மணி படுகொலை தொடர்பான சாட்சியங்களையும் பதிவிட்டுள்ளார்.

மேலும் இந்நூலில் கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு உயிரிழந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டதையும்,

வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களிலில் "லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச" விசாரணையின்போது கீழ் வருமாறு வாக்குமூலம் அளித்தார். "யாழ்குடாநாட்டில் பரவலாக கைது செய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும் என்றார். இதன்பின்னர் 1999ஆம் ஆண்டில் "லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச" வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன், றுகுணு பல்கலைக்கழக மருத்துவப்பீட பேராசிரியர் நெரியல்ல மற்றும் சட்டத்தரணிகளான கேசவன், இளங்கோ, பரமராஜா, பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் முன்னிலையில் 1999ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட்டன.

**புதைகுழி தோண்டுதல் இடைநிறுத்தம்:**

முதற்தடவையாக புதைகுழி தோண்டும்போது பதினொரு எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இச்செம்மணிப் பகுதியில் அமைந்த அரியாலை கொட்டுக் கிணற்றடி, தயா கட்டடம் அமைந்துள்ள பகுதி, செம்மணி வளைவுப் பகுதியென புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டது.

இவை யாழ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுப் பிரேதபரிசோதனையின் பின் பதினாறு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக்கும் உட்பட்டோரினதென அடையாளங் காணப்பட்டது. இரண்டாவது தடவை தோண்டுவதற்கு முன்பாக அப்பகுதியின் பல இடங்களில் இரவு நேரங்களில் மக்கள் செல்வதை இராணுவம் தடைசெய்தது.

மேலும் அவ்வேளையில் அப்பகுதியில் வாகனங்கள் அதிகளவில் நடமாடியதை மக்கள் அவதானித்தார்கள். பின்னர் இரு வாரம் கழிந்த நிலையில் இரண்டாவது புதைகுழி தோண்டும் பணி ஆரம்பமாகியது. ஆறு எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று பெண்ணினுடையதும் மிகுதி ஆண்களினுடையவையென அடையாளங்காணப்பட்டன.

அதன்பின்னர் அரச அழுத்தங்களினால் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணிகளை இடைநிறுத்தப்பட்டது. காலம் பல கடந்தும் இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவிதமான இறுதி முடிவினையும் நீதித்துறை மேற்கொள்ளவில்லை. என்பதே கவலைக்குரிய விடயமாகும். சர்வதேச ரீதியில் கவனத்தைப் பெற்ற செம்மணி படுகொலை வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்திய சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய "Schoolgirl Rape & Four Murders" எனும்நூல் தமிழ் பேசும் மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளின் வரலாற்றுச் சாட்சியமாக அமைகிறது.

---



## வியுக்தியார் பதில்கள்

**கே. கணேஷ், பிரதான வீதி, ஹட்டன்.**

### கேள்வி:

எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் நாளுக்குப் பின்னர் நாட்டில் புதிய தலைவர் ஒருவர் உருவாகுவார் என்று பிரபல பெண் சோதிடர் ஒருவர் தெரிவித்துள்ளதாக "ஈழநாடு" வில் பார்தேன். அப்போ, அதற்குப் பின்னராவது பிரச்சினைகள் தீரும் என்று நினைக்கின்றீர்களா?

### வியுக்தியார்:

அட நீங்கள் வேறு, புதிய தலைவர் என்று அவர் சொன்னது ரணிலுக்கு பதிலாக ஒருவரோ அல்லது கோட்டாவுக்கு பதிலாக ஒருவரோ என்பதுதான். அதற்காக வருபவர் புதியவர் என்று நினைத்துவிட்டீர்கள் போலும், புதிதாக ஒரு பழையவர்தான் வருவாரோ தெரியவில்லை. இவ்வளவு பொறுத்த நமக்கு இன்னும் இருபதுநாள் தானோ பொறுத்திருப்போம். அதன் பின்னனர் பிரச்னை தீருகின்றதா கூடுகின்றதா பார்ப்போம்.

---

**சபா. கதிர், குருமண்காடு, வவுனியா.**

### கேள்வி:

ஒவ்வொரு வாரமும் எரிபொருள் பிரச்னை அடுத்த வாரம் முடிந்துவிடும் என்று சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் ஒவ்வொரு வாரமும் கியூவில் நிற்கவேண்டியிருக்கின்றதே?

### வியுக்தியார்:

அது ஒன்றும் இல்லை. அடுத்தவாரம் எரிபொருள் தீர்ந்துவிடும் என்று சொல்வதற்கு பதிலாக எரிபொருள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று தவறுதலாக சொல்கிறார்கள் போலும்.

**போல் சத்திதாசன், அச்சுவேலி, யாழ்ப்பாணம்.**

### கேள்வி:

நாட்டிலுள்ள நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்களில் தகுதியானவர்கள் பொறுப்பதிகாரிகளாக இல்லை என்றும் அதனாலேயே எம்.பி.க்களின் மாஜி அமைச்சர்களின் வீடுகளை சிலர் கொழுத்தும் போது தடுக்கமுடியவில்லை என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருக்கிறாரே?

### வியுக்தியார்:

அவர்கள் எல்லோருமே அந்தந்த பகுதி எம்.பி.க்கள், அமைச்சர்களின் சிபார்சின் பேரில் நியமிக்கப்பட்டவர்கள் என்பதையும்தான் அவர் சொல்லியிருந்தாரே. அவர் என்ன சொல்ல வருகிறார் என்றால், தகுதியானவர்களை நீங்களும் எம்.பி.க்களாக தெரிவுசெய்யவில்லையே என்கிறார்.

---

**எஸ். சுதர்மன், கைதடி வடக்கு, கைதடி**

### கேள்வி:

மே 9 காலிமுகத்திடல் தாக்குதல் தொடர்பில் முக்கிய பிரமுகர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். பொதுமன்னிப்பில் விடுதலையான கொலைக்குற்றவாளி துமிந்த சில்வா மீண்டும் கைது செய்யப்படுகின்றார். ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கில் பிணை வழங்கப்பட்ட இராணுவ புலனாய்வு பிரிவின் 9 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றனர். நமது நாட்டில் என்ன தான் நடக்கின்றது?

### வியுக்தியார்:

ரணில் பிரதமராக பதவியேற்றதும், சட்டம் ஒழுங்கு சரியாகிவிட்டது. நீதித்துறை சுதந்திரமாக செயற்படுகின்றது. இப்போது நாட்டில் ஒரு பிரச்னையும் இல்லை. பொருனாதார நெருக்கடி மட்டும்தான் பாக்கியிருக்கின்றது. அதனையும் ரணில் வெட்டி ஆடுவார் என்று நீங்கள் நம்பவேண்டாமா? நீங்கள் நம்புகின்றீர்களோ இல்லையோ நம்பவேண்டியவர்கள் நம்பினால் சரிதானே!.

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# "சின்னம்மாவின் "அவர்"

இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்



**சி**வா தனது மனைவி கலாவின் சின்னம்மா தேவராணியை அன்று பினனேரம் சென்று பார்ப்பதாக முடிவு கட்டிய விடயம் அவனது நண்பன் ஒருத்தனின் எதிர்பாராத வருகையால் தடைபட்டுக் கொண்டிருக்கிறது.

வந்திருந்த நண்பனுக்குத் தேனீர் கொண்டு வந்த கலாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைச் சிவா அவதானித்தபோது தர்மசங்கடமாகவிருக்கிறது. கலா, இலங்கைக்கு விடுதலைக்கு வரத்திட்டமிட்ட உடனேயே இந்தத் தடவையாவது தனது சின்னம்மாவைப் போய்ப் பார்க்கவேண்டும் என்ற கோரிக்கையைத் தனது கணவனிடம் மிகவும் அழுத்தமாகச் சொல்லி விட்டாள்.

சிவா தனது குடும்பத்துடன் நீண்ட நாளைக்குப் பின் லண்டனிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கிறான். தனது இளவயதில் சின்னம்மா தன்னை அன்புடன் பார்த்துக் கொண்டதை, கலா பல தடவைகள் அவனுக்குச் சொல்லியிருக்கிறாள். தங்கள் தகப்பன் லண்டனுக்கு வந்த காலத்தில் தங்களுடன் வாழ்ந்த தனது சின்னம்மா கலாவின் இளவயது ஞாபகங்களுடன் இணைந்திருப்பது சிவாவுக்குத் தெரியும்.

கலாவின் தாய் ஒரு ஆசிரியை, அப்போது தங்களைத் தங்கள் சின்னம்மா தனது குழந்தைகள் மாதிரிப் பராமரித்த விடயத்தைக் கலா சிவாவுக்குச் சொல்லும்போது அவள் கண்களின் நீர் கட்டும்.

கலா, இலங்கையின் போர் காலத்தில் பிறந்து வளர்ந்தவள். சாதாரண வாழ்க்கைமுறை தெரியாத அசாதாரண வாழக்கையுடன் வளர்ந்த தமிழ்க் குழந்தைகளில் ஒருத்தி.

இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கை ஒட்டு மொத்தமாக வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருந்த கால கட்டமது. போருக்காகப் பல இளவயதுத் தமிழ்க் குழந்தைகளின் எதிர்காலம் சூறையாடப்பட்ட கொடிய நேரமது. உலகம் புரியாத வயதில், எதிரியுடன் போராட துப்பாக்கி தூக்கி இறப்பதை விட அன்னிய நாட்டில் கடினவேலை செய்து பிழைக்க ஓடிவந்தவர்கள் பலர்.

அப்படி வெளியில் தங்கள் பெண்பிளைளைகளை அனுப்ப விருப்பமற்ற அல்லது அனுப்ப வசதியற்ற பல பெற்றோர் தங்கள் இளம் மகள்களை எப்படியும் திருமணம் கொடுத்து ,அவர்கள் போர்முனைக்கு இழுத்துச் செல்லப்படாமல் காப்பாற்றப் பார்த்தார்கள். கலாவின் குடும்பம் அவர்களின் தந்தை வழிச் சொந்தம் வெளிநாட்டில் இருந்ததால் வெளியில் சென்ற முயன்று கொண்டிருந்தார்கள். ஆனால் கலாவின் தாயின் குடும்பத்தில் வெளிநாட்டில் அப்போது யாரும் இருக்கவில்லை.

அதனால் கலாவின் சின்னம்மா, தேவராணிக்குப் பதினெட்டு வயதாக இருக்கும்போது அவளுக்குத் திருமணம் நடந்ததாம். தேவராணியின் மேற்படிப்பு படிக்க வேண்டும், டாக்டராக வரவேண்டும் என்ற ஆசை தவிடு பொடியானது.

இலங்கை அரசாங்கம் ஒரு பக்கம், விடுதலைப் புலிகள் இன்னொரு பக்கம் "இயக்கப்" பிரச்சினைகளைக் காரணம் காட்டி தமிழ் இளைஞர்களை வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள்.

தேவராணியின் கணவர், அவர்களுக்குத் தூரத்து உறவினரான மாதவன் என்ற இருபத்தி ஐந்து வயது ஆசிரியர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இயக்கத்துடன் தொடர்பிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு பாடசாலையிலிருந்து வீடு திரும்பும்போது கொலை செய்யப் பட்டார்கள். அப்போது தேவராணிக்குப் பத்தொன்பது வயது. வயிற்றில் மூன்று மாதக் குழந்தை. கண்மூடித்தியப்பற்குள் ஒரு தமிழ் உயிர் குண்டடிபட்டுத் தெருவில் சுருண்டு விழுந்தது. தேவராணி விதவையாக்கப்பட்டாள்.

அதன் பின் தேவராணி தனது தமயன், தமக்கையின் உதவியில் வாழ்ந்ததாகவும் அவளின் மகனுக்குப் பதினெட்டு வயதாக இருக்கும்போது வெளி நாட்டில் வாழும் ஒரு மாமாவின் உதவியுடன் அவன் சென்று விட்டதாகவும், சின்னம்மா தனியாக வாழ்வதாகவும் கலா அவனுக்குச் சொல்லியிருக்கிறாள்.

சிவாவுக்கு இந்தக் கதையெல்லாம் அவன் மனைவி சொல்லக் காரணம் என்னவென்றால், அவனும் கலாவும் உறவினர்களல்லர். ஒருத்தரின் குடும்பத்தினரை மற்றக் குடும்பத்திற்குத் தெரியாது. அவனின் குடும்பம் லண்டனிலிருக்கிறது. அவளின் குடும்பம் ஸ்கொட்லாந்தில் இருக்கிறது. அத்துடன் அவர்கள் இலங்கையின் வெவ்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள்.

கலா ஸ்காட்லாந்திலிருந்து லண்டனுக்குப் படிக்கவந்தவள். சிவாவை லண்டனில் அவளுடன் படிக்கும் சினேகிதியின் பிறந்த தின விழாவில் சந்தித்த தொடர்பால் காதல் பிறந்தது. வளர்ந்தது. அவர்களின் பெற்றோர்களான இரு வீட்டாரும் இதை எதிர்பார்த்தார்களா என்பதை அவர்கள் பெரிதாக ஆய்வு செய்து கொண்டிருக்கவில்லை.

தாங்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ளப்போகிறோம் என்ற தங்கள் விருப்பத்தை இருவீட்டாருக்கும் அறிவித்தார்கள். "எந்த ஊர்?" (என்ன சமயம் என அறிந்து கொள்ள உதவும் கேள்வியது.) "ஊரில் எந்தப் பகுதி?"(சாதியைத் தெரிந்து கொள்வதற்கான கேள்வி அது) என்ற கேள்விகள் கலா வீட்டாரிடமிருந்து வந்தபோது, "அவன் இலங்கைப் பூர்வீகத்தைக் கொண்ட தமிழ்ப் பையன்" என்று கலா தனது தாய் தகப்பனுக்குச் சொன்னாள்.

ஏனென்றால் " நாங்கள் பார்க்கும் மாம்பிள்ளையை நீ செய்தால் சந்தோசப் படுவோம். அப்படியில்லை என்றால், எப்படியும் எங்கள் மொழி பேசும் பையனைப் பார்" என்று தாய் தகப்பன் அவளிடம் சாடையாக வற்புறுத்திச் சொல்லி வைத்திருந்தார்கள். அவள் ஒரு கறுப்பனையோ, வெள்ளையனையோ காதலித்திருந்தால் அவர்களால் அதைத் தாங்க முடியாது என்றும் வெளிப்படையாகச் சொல்லியிருந்தார்கள்.

அவனின் குடும்பம் அவனிடம் "நீ சந்தோசமாகவிருந்தால் அதுபோதும். அதற்கேற்றாற்போல் ஒரு துணையைப் பார்" என்று சொல்லி விட்டார்கள். அவனின் தகப்பன் பகுத்தறிவுவாதி, மகனுக்குத் தன் எதிர்காலத்தைக் கொண்டு நடத்தும் அறிவைச் சொல்லிக் கொடுத்திருந்தார்.

லண்டனில் அவர்களின் திருமணம் நடந்ததால் அவர்களுடைய ஒட்டு மொத்தச் சொந்தங்களும் திருமணத்திற்கு வரமுடியவில்லை இருவரினதும் குடும்பங்களும் பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் மாதிரி, இலங்கை கனடா, ஐரோப்பா லண்டன் என்று பல நாடுகளில் சிதறி வாழ்கிறார்கள்.

அவர்களுக்குத் திருமணமான காலத்தில் இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்தது. அதன் பின் சிவா தனது மேல்படிப்பு காரணமாக சில வருடங்கள் பெரிய பிரயாணங்களைத் தவிர்த்தான். அதன்பின் அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தனா.

இப்போது இலங்கை வந்தபோது, கலா யாழ்ப்பாணத்திலுளடள தனது உறவினர்களைப் பார்க்கப் போவது அவளுக்கு மிக முக்கியமான விடயமாக விருந்தது. இருவரும் இளவயதில் இலங்கையை விட்டுப் போனவர்கள். ஆனால் அவர்களின் குடும்பங்கள் இலங்கையின் பல இடங்களிலும் இருக்கிறார்கள்.

சிவா, இலங்கைத் தலைநகர் கொழும்பு நகரில் பிறந்து வளர்ந்தவன். சிவா சிறு வயதில் தனது உறவினர்களைப் பார்க்க யாழ்ப்பாணம் சென்றிருக்கிறான். ஆனாலும் யாழ்ப்பாணம் அவனுக்கு அவ்வளவு பரிச்சயமில்லை.

இப்போது அவர்கள் யாழ்ப்பாணத்தில் கலாவின் தகப்பனின் சொந்தக் காரர் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். லண்டனிலுள்ள சிவாவின் லண்டன் சினேகிதனும் விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்து நிற்கிறான். இன்று சிவாவைப் பார்க்கவந்தான். பேசிக் கொண்டிருந்ததால் சின்னம்மா வீட்டுக்குப் பின்னேரம் போகவேண்டியது தடைப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்திற்கு அவன் கலாவின் சின்னம்மாவைப் பார்க்க முடியாததால், கலாவின் முகத்தில் கோபம் படர்ந்து விரிந்திருந்தது. கலா எதையும் சரியான நேரத்திற்குச் செய்யும் பெண். வெளிநாட்டில் வாழ்வதால் வரும் பல நல்ல பழக்க வழக்கங்களில் அதுவும் ஒன்று. ஒரு இடத்திற்குச் சொன்ன நேரத்திற்குப் போகாவிட்டால் அது அவர்களை அழைத்தவர்களை அவமானம் செய்வது என்று கருத்தாகும்.

"கலா டார்லிங் ஐ யம் சாரி, உனது சின்னம்மாவுக்கு நாங்கள் ஏன் குறிப்பிட்ட நேரத்திற்கு வரமுடியவில்லை என்று சொன்னால் புரிந்து கொண்வார் இல்லையா?" சிவா குற்ற உணர்வுடன் முணுமுணுத்தான்.

"உங்களுக்கு எனது சின்னம்மாவைத் தெரியாது" அவள் பட்டென்று சொன்னாள்.

" ஆமாம் இதுவரையும் உனது சின்னம்மாவை நான் காணவில்லை என்று உனக்குத் தெரியும்தானே" அவனுக்கு இப்போது கோபம் வரத் தொடங்கியது. அவன் வேண்டு மென்றே நேரத்தைத் தவறவிடவில்லை என்று அவளுக்குத் தெரியும், ஆனாலும் அவனிடம் அவள் கோபப்படுவது நியாயமாகப் படவில்லை.

கலாவுடன் தர்க்கம் செய்யாமல் தனது பார்வையை அவர்கள் சென்ற வழி நெடுகவிருந்த வானம் பார்த்த பனை, தென்னை மரங்களிலும். கொத்தாகத் தொங்கும் மலர்க் கொடிகளிலும் தவழவிட்டான்.

இலங்கையில் போர் முடிந்து பல ஆண்டுகள் முடிந்து விட்டன. ஆனாலும் இடிந்த வீடுகளும், மதில்களும் போரின் வடுக்களைத் தாண்டி ஆங் காங்கே தென்பட்டன.

யாழ்ப்பாண நகரத்தில் தங்கி நிற்கும்போது முடிந்த வரை நடந்து சென்றுதான் கலாவின் உறவினர்களைப் பார்ப்பேன் என்று அவன் சொல்லியிருந்தான். யாழ் நகரின் இயற்கை. செயற்கை அழகை அவசரமான வாகன ஓட்டத்தில் தவறவிட அவன் தயாராகவில்லை. அவனின் சிறுவயதில் யாரோ ஒரு சொந்தக்காரரின் திருமணத்திற்கு யாழ்ப்பாணம் வந்தது ஞாபகமிருக்கிறது. அப்போது, யாழ்ப்பாணத்தின் மரங்கள், பூக்கள், செடிகொடிகள் அவனைக் கவர்ந்து விட்டன.

இலங்கையின் பெரிய நகரான கொழும்பு நகரின் ஆரவாரம், அவசரம், இடைவிடாத சத்தங்கள் என்பன யாழ் நகரிற் கிடையாது பெரும்பாலான குடியிருப்புக்களில் அமைதி நிலவும்.

அழகிய மாலைநேர இளம் தென்றல் பண்ணைக் கடற்கரைதாண்டி வந்து அவர்களின் கன்னங்களில் முத்தமிட்டுச் சென்றது. அவ்வப்போது சில வாகனங்கள் அவர்களைக் கடந்து சென்றன.

கலா அவனுடன் பேசாமல் விறுவிறுவென்று நடந்து கொண்டிருந்தாள் அவளின் கோபம் அவனுக்கு அளவுக்கு மீறியதாகவிருந்தது. அவளின் மெளனம் எரிச்சலையுண்டாக்கியது.

"வட் இஸ் த மட்டர் கலா? நான் வேண்டுமென்றே நேரம் கடத்திமாதிரி கோபப் படுகிறாய" அவன் அவளைக் கோபத்துடன் கேட்டான்.

"நாங்கள் போன தடவை வந்தபோது சின்னம்மாவைப் பார்க்க முடியவில்லை என்பதால் அவர் பட்ட துக்கம் எனக்குத் தெரியும்" கலா தனக்குள் பேசுவது மாதிரி சொல்லிக் கொண்டாள்.

"கலா போனதடவை எங்களால் யாழ்ப்பாணம் வரமுடியவில்லையே" அவனுக்குக் கலாவைப் புரியவில்லை.

"உங்களுக்குச் சின்னம்மாவைத் தெரியாது" அவள் எரிந்து விழுந்தாள்.

சிவா தனது மனைவியின் சின்னம்மாவை நேரில் பார்த்தது கிடையாது. பழைய படங்களில் கண்டிருக்கிறான். அந்தப் படங்களில் இளமையும் மிகவும் அழகானதுமான ஒரு இளம் பெண்ணின் சோகம் கவிழ்ந்த முகம் அவனைத் துன்பப் படுத்தியது. தேவராணி பத்தொன்பது வயதில் விதவையாகியவள். அதன் பின்னர் தனது மகனுக்காக உழைத்து வாழ்ந்தவள். குடும்பத்திலுள்ள பெரும்பாலனவர்கள் தங்கள் உயிரைப்பாதுகாக்க வெளிநாடுகளுக்குச் சென்றபோது "அவருடன் வாழ்ந்த வீட்டை" விட்டு விலகமாட்டேன் என்ற பிடிவாதத்துடன் அந்தப் பழைய வீட்டில் தனிமையாக இன்னும் வாழ்பவள்.

அவளின் வாழ்க்கையின் முதுமை எட்டிப் பார்க்கிறது. வெளிநாட்டிலிருக்கும் மகன் எவ்வளவோ கெஞ்சியும் "அவருடன் வாழ்ந்த" வீட்டை விட்ட அகலமாட்டேன் என்று பிடிவாதமாகவிருப்பவள். இப்படியான விடயங்களைத்தான் கலா தனது சின்னம்மா பற்றிச் சொல்லியிருந்தாள். அதற்கு மேலாக அவனுக்கு எதுவும் தெரியாது. "எனக்குத் தெரியாத விடயங்களை நீ சொல்லியிருக்கலாமே" அவன் முணுமுணுத்தான்.

"இலங்கையில் நடந்த போருக்கு முன்னாலே உங்கள் குடும்பம் வெளியில் போய்விட்டது. நாங்கள் போர் நடந்துகொண்டிருந்தபோது நாட்டைவிட்டுப் போய்விட்டோம். ஆனால் ஆரம்பத்திலிருந்து போரையும் துயரையும் தவிர எதையும் காணாத சின்னம்மா போன்றவர்களின் துக்கத்தையோ மனச்சிக்கல்களையோ உங்களால் புரிந்து கொள்ளமுடியாது" கலாவின் குரல் மிகவும் கலங்கிப்போயிருந்தது.

**(மிகுதி அடுத்த வாரம் வரும்...)**

# இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரதான மூலதனம் கல்வி ஒன்றே!

## அதற்கு மழலைகளின் சீரான முன்பள்ளிக் கல்வியே முதற்படியாகும்!!

நடராஜா சச்சிதானந்தன் - லண்டன்

இலவசக் கல்விமுறை நடைமுறையில் உள்ள இலங்கையில், தமிழ் மாணவர்களைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழகங்களுக்கு தகமை பெறுவதே பெரிய போராட்டமாகும். இந்நிலையில், தகமை பெற்று பட்டதாரிகளாக தேர்ச்சிபெற்று வெளிவருபவர்களும், சரியான துறைசார் கல்வியை தேர்ந்தெடுக்காமையினால், அவர்கள் பெற்ற பட்டப்படிப்பு அவர்களுக்கு உரிய தொழில், வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ளமுடியாமல் பெரும்பாலானோர் உள்ளனர். இதற்கு முதற்காரணம் தகுந்த துறை சார் ஆசிரியர் பற்றாக்குறையும், உரிய பாடத் தேர்வு இன்மையுமே பிரதான காரணிகளாகும். மாற்றம் ஏற்படாத வரைக்கும் இந்நிலையே தான் தொடரப்போகின்றது.



இலங்கையில், குறிப்பாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள வடமாகாணத்தை எடுத்துக் கொண்டால், மீண்டும் கல்வியில் உச்சம் பெற்று சமூக பொருளாதாரத்திலும் தன்நிறைவு பெற வேண்டுமெனில், சிறந்த திட்டமிடப் பட்ட கல்விமுறை மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதற்கு மக்கள் பிரதிநிதி களான அவ்வப்பகுதி அரசியல்வாதிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அனைவரும் சமூகத்தின், இனத்தின் நலன்கருதி கல்வித்துறையில் இதயசுத்தியுடன் பணி யாற்றவும், கல்விநிர்வாகத்தில் தனிப்பட்ட சுயநல ஊழல் ஊடுருவுவதைத் திடமான மனதுடன் தடுத்து, அர்ப்பணிப்புடன் உழைக்க முன்வரவேண்டும்.

திட்டமிட்ட கல்விச் சீர்திருத்தம், ஆரம்ப பாடசாலைக் கல்விக்கு முன்னரான முன் பள்ளிகளிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். அதுவும் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய முன் பள்ளிகளில் ஆரம்பிக்கப்படவேண்டும். அவற்றிற்கு தேவையான பயிற்சிபெற்ற ஆசிரியர்களும், அவர்களுக்குரிய தரமான ஊதியமும் துறைசார் மரியாதையும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

முன்பள்ளியில் காலடியெடுத்து வைக்கும் மழலைகளுக்குரிய சகல கல்வி உபகரணங்களும், போசாக்கு நிறைந்த உணவு வகைகளும், அவர்களுக் குரிய சுகாதார தேவைகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். பாலகர்களின் மூளை விருத்திக்கு இவை அனைத்தும் இன்றியமையாததென, குழந்தை நல நிபுணர்களும் இவற்றின் அத்தியாவசியத்தை உறுதிப்படுத்துகின்றனர்.

இலங்கையில் முன்பள்ளிகள் பரவலாக காணப்பட்டாலும் அனேக இடங்களில் முன்பள்ளிகள் அமையப்பெறவில்லை. ஏற்கனவே இயங்குகின்ற முன்பள்ளிகள் பல் வேறு மட்டங்களில் ஏற்றத்தாழ்வுகளுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, தீவுப் பகுதி போன்ற பகுதிகளில் உள்ள முன்பள்ளிகள் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றன. பல கிராமங்களில் முன்பள்ளிகளே இல்லாத நிலையும் தெரியவருகின்றது.

பலமாடிக் கட்டிடங்களுக்கு ஆளமானதும், காத்திரமானதுமான அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ, அதுபோலவே ஒருஇனத்தின் எதிர்கால நிலையான இருப்பிற்கு அவ்வினத்தின் மழலைகளின் கல்வி தீர்க்க தரிசனத்துடனும், தூர நோக்குடனும் சிறந்த முறையில் அமைக்கப்படவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் பொறுப்புவாய்ந்த தலைமுறையினர் எமது மக்களினதும் எதிர்காலச் சந்ததியினரினதும் நலன் கருதி, எமது இனம் எதிர்காலத்தில் வலிமையானதாக வாழ்வதற்கும், சகல துறைகளிலும் வளர்ச்சியடைவதற்கும் பொருளாதார நிறைவு பெறுவதற்கும் எம் அனை வரது பங்களிப்பும் இன்றியமையாததாகும். குறிப்பாக வளர்சியடைந்த நாடுகளில் குடியேறி வாழ்கின்ற எம் தமிழ்மக்கள் அனைவரும் இம்முயற்சியில் பங்குதாரர்களாக சேர்ந்து கைகோர்த்து செயற்பட வேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

---

# நூல் அறிமுகம்: 'நோ போல்', 'திரைக்கண்'

## அத்தி பூத்தாற் போன்று அவதரிக்கும் மெல்பன் கிருஷ்ணமூர்த்தியின் இரண்டு நூல்கள்!


முருகபூபதி

அவுஸ்திரேலியா விக்ரோரியா மாநிலத்தில் மெல்பன் நகரில் வதியும் எஸ். கிருஷ்ணமூர்த்தி, சிறுகதை, கட்டுரை, சினிமா விமர்சனம், பத்தி எழுத்துக்கள் என அவ்வப்போது எழுதிவருபவர்.

ஆனால், தொடர்ச்சியாக எழுதமாட்டார். அவ்வாறு எழுதாத காலங்களில் நிறைய வாசிப்பார். அல்லது திரைப்படங்களை தேர்வுசெய்து பார்த்து ரசிப்பார்.

படித்த நூல்களை, பார்த்த சினிமா வைப்பற்றி எழுதவேண்டும் என நினைப்பார். ஆனால், அந்த நினைப்பு, நினைப்பாகவே கடந்துவிடும். திடீரென எழுதவேண்டும் என்ற யோசனை பிறந்தால், எழுதிவிடுவார்.

மெல்பனில் நடேசன் சில வருடங்களுக்கு முன்னர் வெளியிட்டு வந்த 'உதயம்' ( ஆங்கில - தமிழ் ) இருமொழிப் பத்திரிகையில் கிருஷ்ணமூர்த்தி, தான் பார்த்த சினிமாக்கள் பற்றிய விமர்சனங்களை எழுதிவந்தவர். உதயம் நின்றதும், அத்தகைய எழுத்துக்களையும் கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து எதிர்ப் பார்க்க முடியாமலிருந்தது.



எப்போதாவது சிறுகதையும் எழுதுவார். அவுஸ்திரேலியா தேசிய வானொலியான SBS தமிழ் ஒலிபரப்பிலும் இவரது கதை ஒலிபரப்பானது. கதையும் கதையாளரும் என்ற அந்த நிகழ்ச்சியை SBS ஊடகவியலாளர் ரெய் செல் சிறிது காலம் திறம்பட நடத்தினார்.

அவ்வாறு ஒலிபரப்பப்பட்ட 'பசி' என்ற கதையும் இடம்பெற்றுள்ள தொகுப்பினை 'நோ போல்' என்ற பெயரில் கிருஷ்ணமூர்த்தி தற்போது வரவாக்கியிருக்கிறார்.


குறிப்பிட்ட பசி சிறுகதை, அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் 2005ஆம் ஆண்டு வெளியிட்ட உயிர்ப்பு தொகுப்பிலும் இடம்பெற்றது. அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு 2011ஆம் ஆண்டு கொழும்பில் நடந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் மொழி பெயர்ப்பு அரங்கில் வெளியிடப்பட்ட Being Alive நூலிலும் இடம் பெற்றது.

கிருஷ்ணமூர்த்தி அத்திபூத்தாற்போன்று எப்போதாவதுதான் எழுதுவார். 2013இல் மறுவளம் என்ற கட்டுரைத் தொகுப்பினை வரவாக்கியவர். தற்போது நோபோல் (No Ball) என்ற 56 பக்கங்களில் எட்டுச் சிறுகதைகளைக்கொண்ட தொகுப்பினையும், 76 பக்கத்தில் திரைக்கண் (சில படங்கள் சில பார்வைகள் ) என்ற சினிமா விமர்சன நூலையும் வரவாக்கியுள்ளார்.

இந்நூல்களை கிளிநொச்சி மகிழ் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

கிருஷ்ணமூர்த்தி குறைவாக எழுதினாலும், கவனத்திற்குரிய எழுத்தாளர்.

இத்தொகுப்பின் அனைத்துச் சிறுகதைகளும் எமது தமிழர்களின் புகலிட வாழ்வுக் கோலங்களை சித்திரித்திருந்தாலும், உயிர் என்ற கதை மாத்திரம் தாயகத்தில் யாழ்ப்பாணத்தையும், புகலிடத்தில் அவுஸ்திரேலியா மெல்பனையும் இணைக்கின்றது. அத்துடன் அதிர்வையும் ஏற்படுத்தும் கதை.



இக்கதையில் வரும் யாழ்ப்பாணம் டொக்டர் கந்தசாமியும் போர்க் காலத்தில் இயக்கத்தின் ஏரியா பொறுப்பாளர் தமிழ் அழகனும் புகலிடத்தில் சந்தர்ப்பவசமாக சந்திக்கும் புள்ளியே அந்த அதிர்வு. இதனை இத்தொகுப்பின் மகுடக்கதை எனவும் எனது பார்வையில் சொல்லலாம்.

புகலிடத்தில் இரண்டக வாழ்வுடன் போராடிக் கொண்டிருப்பவர்கள் பலரை கிருஷ்ணமூர்த்தியின் சிறுகதைகளில் அவதானிக்க முடிகிறது.

நோபோல் என்ற சிறுகதை சுழல் பந்து வீச்சு சாதனையாளர் முத்தையா முரளீதரனைப்பற்றியும் பேசுகிறது. அவர் நாம் வாழும் நாட்டில் முன்னைய பிரதமராால்கூட எள்ளி நகையாடப்பட்டவர் தான். அவர் வீசும் ஒவ்வொரு பந்தும் விமர்சிக்கப்பட்டது. இக்கதையின் தொடக்கத்தில் வரும் மேற்கோள் குறிப்பு இது : 'நீங்கள் எங்கு நிராகரிக்கப்பட்டீர்களோ, எங்கு அவமானம் செய்யப்பட்டீர்களோ, அதே இடத்தில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுப்பதுதான் உண்மையான வெற்றி.'

சாப்பாட்டு ராமன் என்று பெயரெடுத்து, பல்தேசிய கலாசார உணவு வகைகளையெல்லாம் தயாரிக்கத் தெரிந்த ஒருவருக்கு மனைவி தரும் உணவு நீரிழிவு, கொலஸ்ரோல், பிரஷர் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு.

இவ்வாறு நகைமுரண்கொண்ட கதைகளை நறுக்குத் தெறித்தாற்போல் சொல்கிறார் இந்த கதை சொல்லி.

**திரைக்கண்**

தரமான திரைப்படங்களை பார்ப்பதும், தனது அவதானிப்பை விமர்சனக் குறிப்புகளாக எழுதுவதும் கிருஷ்ண மூர்த்தியின் வழக்கம். கடந்த காலங்களில் அவர் பார்த்த, ஏன் நாமும் பார்த்து ரசித்த சில தமிழ்த்திரைப் படங்களைப்பற்றி எழுதியிருக்கிறார்.

தனது இளமைக் காலத்தில் திரைப்படங்கள் பார்ப்பதற்கு அனுமதியளித்த தனது பெற்றோருக்கும் யாழ்நகரில் தற்போது காணாமல் போய்விட்ட திரையரங்குகளுக்குமே இந்த 'திரைக்கண்' நூலை சமர்ப்பணம் செய்துள்ளார்.

திரையரங்குகள் கட்சி அலுவலகமாகவும், களஞ்சியச்சாலைகளாகவும் திருமண மண்டபங்களாகவும் மாறியிருக்கும் சூழலில், நாம் எமது கைத்தொலைபேசியிலும் திரைப்படம் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

இக்காலத்தில் எந்தப் பிள்ளையும் பெற்றோரிடம் அனுமதி கேட்காமலேயே கைத்தொலைபேசியில் பார்க்க முடியும் என்பதையும் சுட்டிக்காணப்பிப்பதற்காக, கிருஷ்ணமூர்த்தி அங்கதமாக இந்த சமர்ப்பணத்தை எழுதினாரோ தெரியவில்லை.

மொத்தம் பத்தொன்பது தமிழ்த் திரைப்படங்கள் பற்றிய அவரது அவதானக்குறிப்புகள்தான் இந்த நூல்.

பிறமொழிப்படங்கள் பற்றியும் கிருஷ்ணமூர்த்தி எதிர்காலத்தில் எழுத வேண்டும்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

24. 2
25. 3
26. 1
27. 2
28. 2
29. 2
30. 3
31. 1
32. 1
33. 1
34. 2
35. 1

கல்வி tv CHANNEL-1

**05.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**05.06.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தனியார் பஸ் சேவைகளில் நாளை முதல் மட்டுப்பாடு!

கொழும்பு, ஜுன். 05

டீசல் தட்டுப்பாடு காரணமாக நாளை திங்கட்கிழமை முதல் இயங்கும் பஸ்களின் எண்ணிக்கையை தனியார் பஸ் உரிமையாளர்கள் மட்டுப்படுத்தி யுள்ளனர்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய எரிபொருள் தட்டுப் பாடு காரணமாக சில மாதங்களாக பஸ் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள் ளன. பஸ்களுக்கு டீசல் வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும், அதற்கான வேலைத்திட்டம் எதுவும் தயாரிக் ப்ரீகப் படவில்லை. இதனால், பஸ்கள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் நீண்ட நேரம் நிறுத்த வேண்டியுள்ளது.

பொதுப் போக்குவரத்துத் துறையில் உள்ள குறைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியது அரசின் பொறுப்பு. பஸ்களுக்கு குறைந்த பட்சம் ஒரு வாரத்திலாவது டீசல் வழங்கும் திட்டத்தை போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சுகள் வகுக்க வேண்டும். இல்லை என்றால் ஜுன் 6 முதல் பஸ்கள் இயக்கப்படாது.

திங்கட்கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு 6,000 பஸ்கள்




மட்டுமே இயங்கும்.

ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள் ளது. கோவிட் தொற்றுநோய் காரண மாக, நாங்கள் பஸ்களை இயக்குவதை நிறுத்த வேண்டியிருந்தது.

மேலும் எங்களால் பஸ் வாடகையை கூட செலுத்த முடியவில்லை. தற் போதும் நாம் அதேபோன்றதொரு நிலையை எதிர்கொண்டுள்ளோம். இந் நிலையில் பஸ் சேவையை நிறுத்துவதை தவிர வேறு வழியில்லை.

கல்விப் பொதுத்தராதர (க.பொ.த) சாதாரண தர (சா/த) பரீட்சைகளும் முடி வடைந்துள்ளதால், எமக்கு தீர்வு வழங்கப்படாவிடின் செயற்பாடுகளை இடைநிறுத்தவும் தயங்க மாட்டோம்- என்றார். (அ)

# டயானா கமகே இன்னும் ஐக்கிய மக்கள் சக்தியில்!

கொழும்பு, ஜுன். 05

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிப்பதற்காக 2020 ஆம் ஆண்டு பொது ஜன பெரமுன அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே, இன்னும், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளராக பதவி வகிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளில் பெண் பிரதிநிதித்துவம் குறித்த அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் கூறுகின்றது.

டயானா கமகே, அரசாங்கத்தில் இணைந்ததை அடுத்து அவர்,கட்சி யிலிருந்து நீக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பி னர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

இந்தநிலையிலேயே புதிய தகவல் வெளியாகியுள்ளது

இதேவேளை தாமே, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உரிமையாளர் என்று டயானா கமகே கூறிவருகிறார். (அ)

# மரத்துடன் மோதி ஓட்டோ விபத்து!

## இருவர் பலி, ஐவர் காயம்

கொழும்பு, ஜுன். 05

தனமல்வில, சூரியாரா பகுதியில் ஓட் டோவொன்று நேற்று முற்பகல் விபத் துக்குள்ளானதில் இருவர் பலியாகியுள் ளனர். மேலும் ஐவர் படுகாயமடைந்துள் ளனர்.

குறித்த ஓட்டோவில் 9 பேர் பய ணித்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

உடவளவயிலிருந்து தனமல்வில நோக்கி பயணித்த குறித்த ஓட்டோ, வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி யதாலேயே இவ்விபத்து இடம்பெற் றுள்ளது. (அ)

# கச்சதீவு:

## ஓயாது தொடரும் பிரச்னை!

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

## இரு நாட்டு மீனவர்களும் ஒற்றுமையாக தொழில் செய்யும் நிலை வேண்டும்!

அன்னலிங்கம் அன்னராசா,
தலைவர்,
யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனம்.




இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் இலங்கையிடம் கையளிக்கப்பட்ட கச்சதீவை மீண்டும் இந்தியா கையகப்படுத்தும் என்பதில் நம்பிக்கையில்லை.

இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி அண்மை நாட்களாக, எமது வடக்கு மாகாண மக்களுக்கு சொந்தமான கச்சதீவு தொடர்பான பிரச்னை தமிழ்நாட்டில் ஒரு பேசுபொருளாக இருக்கின்றது. ஆனால், அந்த பேசுபொருளை எங்களின் தமிழக முதல்வர் பாரதப் பிரதமர் தமிழ்நாட்டில் பங்கேற்ற மேடையில் கூறியிருந்தார்

கச்சதீவை மீட்பதனால் தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்னை தீர்க்கப்படும் என்று. ஆனால், வட பகுதி மீனவர்களை பொறுத்தவரை தமிழ்நாட்டில் உள்ள சட்டவிரோத இழுவை மடி தொழிலை நிறுத்தினாலே தமிழ்நாட்டில் மீனவர்களின்பிரச்னை தீர்க்கப்படும். அதை தடுத்துநிறுத்த தமிழ்நாட்டு முதலமைச்சர் முதலில் நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும். தமிழ்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் போட்டி நிலைமையாலேயே கச்சதீவைப் பேசு பொருளாக உருவாகியுள்ளது.

எங்களைப் பொறுத்தவரையிலே கச்சதீவு இந்திய பிரதமரால், 1974ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வழியாக இலங்கைக்கு வழங்கப்பட் டிருக்கின்றது. மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியா அதனை மீளப் பெறும் என்று வடக்கு கடற்றொழிலாளர்கள் நாங்கள் எள்ளளவும் நினைக்க வில்லை.

கச்சத்தீவு தமிழக நலன் சார்ந்த அரசியல் பேசு பொருளாகதான் பார்க்கப்ப டுகின்றது. கச்சதீவில் எதிர்ப்பதால் தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும் என்றால் அது நடக்காது. இதற்கு தீர்வு சட்ட விரோத இழுவை மடிதொழிலை நிறுத்துவதே. தமிழக முதல்வர் அவர்களே,

இரண்டு நாட்டு மீனவர்களும் நாங்கள் ஒற்றுமையாக தொழில் செய்வதற் குரிய வழியை ஏற்படுத்த வேண்டும்.

## நாம் பட்டினிக்கு தள்ளப்படுவோம்!

மரியநாயகம் இமானுவேல்,
குருநகர் கடற்றொழில் சங்க ஆலோசகர்




இந்திய நாட்டுக்குச் சொந்தமாகவி ருந்து இலங்கைக்கு கையளிக்கப்பட்ட கச்சதீவை மீளப் பெற வேண்டும் என்ற ஒரு கோஷம் தமிழ்நாட்டு அரசு முன்வைத் துள்ளது.

கச்சதீவு இந்திய - இலங்கை மீனவர் கள் மத்தியில் ஒரு முக்கிய தீவாக காட்சிய ளிக்கிறது. கச்சதீவு இந்தியஅரசாங்கத் திடம் இருந்தபோது எமது மீனவர்கள் சொல்லொணா துயரங்களை எதிர்நோக்கி இருந்தார்கள். அவர்கள், கச்சதீவை மையமாகக் கொண்டு எமது வட கடல் பிரதேசம் முழுவதையும் தங்களுடைய ஆளுமைக்குள் வைத்துக்கொண்டு எங்கள் கடல் பிரதேசம் முழுவதும் அவர்களால் அழிக்கப்பட்டது.

நாட்டில், யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில்தான் எங்களுக்கு ஓரளவு விடிவு ஏற்பட்டது. அதாவது அவர்களின் வருகை குறைவடைந்திருந்தது. இப்போது, மீண் டும் கச்சதீவை அவர்களுக்கு கையளிக்கும் பட்சத்தில் நாங்கள் முன்னர் அனுபவித்த கஷ்டங்களை மீண்டும் அனுபவிக்க வேண்டி நேரிடும்.

இலங்கை மக்களுக்கும் அதேநேரம் இந்திய மக்களுக்கும் முக்கியமாக தமிழ் நாட்டு மக்களுக்கு நாங்கள் ஒரு விட யத்தை தெளிவாகக் கூறவேண்டிய ஒரு நிலையில் உள்ளோம். கச்சதீவு மீண்டும் எப்போது இந்திய அரசுக்கு கையளிக்கப் படுகின்றதோ அன்றிலிருந்து வட பகுதி மீனவர்கள் - அதாவது கடலை நம்பி வாழும் நாங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தொழில் முயற்சியை முழுமையாக கைவிட்டு கரையோரத்தில் பட்டினி கிடக்கும் சூழ்நிலைக்கு தள்ளப்படுவோம்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் - தொப்புள் கொடி உறவு என்று சொல் கின்ற எங்கள் தமிழின மக்களின் மனதை புண்படுத்தும் ஒரு வார்த்தை பிரயோ கத்தைப் பிரயோகித்திருக்கின்றார். அது என்னவென்றால் தற்போதைய சூழ் நிலையை சாதகமாக்கிக் கொண்டு நாங் கள் இந்த நேரத்தில் கச்சதீவை மீள கையகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை பார்க்கும்போது தமிழில் நல்ல ஒரு பழமொழி உண்டு பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போல் இந்த கதை உள்ளது.

நாம் இப்போது இருக்கிற சூழ் நிலையை கருத்தில் கொண்டு எங்களுக்கு உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அதே நேரம் இலங்கையில் உள்ள பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு இந்த நேரம் இதற்குரிய சூழல் நிலவு கின்றது என அவர் கூறும் வார்த்தை பிரயோகம் நிச்சயமாக வேதனை அளிக்கக்கூடிய விடயமாகும்

கச்சதீவு பிரச்னை இன்று மீனவ இனத் தின் பிரச்னையாகியுள்ளது. இலங்கைக்கு சொந்தமாக கச்சதீவு இருந்த போதிலும் இந்திய மீனவர்கள் தொழில் செய்யும் பிரதேசமும் எங்களுடைய வடகடல் பிரதேசமாகத்தான் அமைந்திருக்கின்றது. எல்லை தாண்டி அவர்களுக்கு நாங்கள் படும் வேதனை தெரியும். இந்நிலையில், கச்சதீவை மீள கையளித்தால் எங்கள் நிலை என்னவாக இருக்கும் என்பதை நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

கச்சதீவை இந்தியா கையகப்படுத்த வேண்டும் என முதலமைச்சர் தெரிவித்த கருத்தானது வட பகுதியையும் இந்தியா வின் ஒரு மாநிலத்தில் இணைத்துக் கொள் ளுங்கள் என்று கூறுமளவுக்கு அவரின் வார்த்தைப் பிரயோகம் அமைந்துள்ளது

வட பகுதியில் உள்ள மீனவர்கள் இந்தக் கடலில் பெறும் பயனை விட தமிழ்நாட்டு மீனவர்கள்தான் அதிக பயனை பெறுகின்றனர். இப்படியான சூழ்நிலையில் இன்றும் கச்சதீவு இந்தியாவிடம் கையளிக்கப்படுமாக இருந்தால் நான் முன்பு கூறியதைப் போல கரையோரத்தில் பட்டினி கிடக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவோம் இதுதான் உண்மையான நிலைப்பாடு.



ஈ.பி.டி.பி. உறுப்பினர் றெமீடியஸ் தெரிவிப்பு

# யாழ்ப்பாண மாநகர சபையின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு!

யாழ்ப்பாணம், ஜுன். 05

பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தூரநோக்கினால் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு தற்போதைய மாநகர சபை நிர்வாகத்தினர் அழகிய நுழைவாயிலை அமைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது என்று தெரிவித்துள்ள யாழ் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி றெமீடியஸ், மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈ.பி.டி.பி கட்சி என்றும் துணையாக இருக்கும் என்றும் கூறினார்.

கோம்பயன்மணல் இந்து மயானத்தின் நுழைவாயில் திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

யாழ்ப்பாண மாநகரில் ஒரு மின் தகன மேடை உருவாக்கப்பட வேண்டும் என பலதரப்பட்டவர்களின் ஆலோசனைக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அயராத முயற்சியால் பலகோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த மின் தகன மேடை உருவாக்கப்பட்டது.

யாழ் மாநகரின் ஆட்சிப் பொறுப்பு திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவை முதல்வராக கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குள் இருந்த காலப்பகுதியான 2009-2013 காலப் பகுதியில் இது அமைக்கப்பட்டது.

இந்த மின் தகன் மேடையை அமைப்பதற்காக அன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சி எடுத்தபோது அதை விமர்சித்தவர்களும் தடுத்தவர்களும் ஏராளம். ஆனால் இன்று எமது பிரதேசத்தில் இத்தகைய ஒரு மின் தகன மேடை இருக்கின்றதென பலர் மார் தட்டுகின்றனர்.

இதேபோல வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திகள் பலவற்றை அவர் முன்னெடுத்தபோதும் குழப்பங்களை விளைவித்தனர். ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்தகையவர்களின் கருத்துக்களையும் குழப்பங்களையும் கண்டுகொள்ளாது அவற்றை முன்னெடுத்து சாதித்துக் காட்டியிருந்தார். அதன் பலன்களையே இன்று பலரும் அனுபவித்து வருகின்றனர்.

அந்தவகையில் இன்று இந்த கோம்பயன்மணல் மயானம் மேலும் அபிவிருத்தி கண்டுள்ளது.

அதன் ஒரு பாகமாகவே இந்த மயானத்தின் நுழைவாயில் அமைக்கப்பட்டு இன்று திறந்துவைக்கப்படுள்ளது.நாம் அபிவிருத்திகளை தடுத்தவர்கள் அல்லர். தடுப்பதற்கும் ஒருபோதும் முயற்சிகளையும் மேற்கொண்டதும் கிடையாது.

அந்தவகையில் இந்த மாநகரின் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எமது கட்சி என்றும் முன்னின்று உழைக்கும்-என்றார். (அ)

## 65,000 மெற்றிக்...

வழங்கப்படவுள்ளதாக இந்திய தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, இலங்கையில் விவசாயத்தை பாதுகாப்பதற்காக பல்கலைகழக விரிவுரையாளர்கள் ஒன்றியத்தினால் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறித்த யோசனைகள் நேற்று அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ)

## செவ்வாய்க்...

உட்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இதன் காரணமாக இன்று,நாளை ஆகிய தினங்களில் எரிவாயுவுக்காக வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் பொது மக்களை கோரியுள்ளது.

எவ்வாறாயினும் அத்தியாவசிய மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு தேவையான 37.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு விநியோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## தமிழக...

துரையாடியதாக இந்தியாவுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

கச்சதீவை மீட்பதற்கு இதுவே உகந்த தருணம் என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந்த விவகாரம் இரு நாடுகளிலும் பேசுபொருளாக மாறியுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. எனினும் இது குறித்து இச்சந்திப்பின் போது பேசப்பட்டதாக என்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை. (அ)

## 21ஆவது...

அத்தோடு அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் ஊடாக சுயாதீனத்தன்மை குறைக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் அதிகாரங்கள் மீண்டும் பலப்படுத்த வேண்டும் என அவர் கூறினார்.

குறிப்பாக 21 ஆவது திருத்தம் ஊடாக தேசிய சபை மற்றும் கணக்காளர் நாயகம் ஆகிய ஆணைக்குழுக்கள் மீள ஸ்தாபிக்க வேண்டும் என நீதியமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## இரு தரப்பு...

கொழும்புக்கான விமான சேவைகளை அந்த நிறுவனம் இடைநிறுத்தியுள்ளது.

எனவே இரு நாடுகளுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையில் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதற்கு முன்னர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

கொரகபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன மேற்கொண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# காலி முகத்திடல் வன்முறைகள்: மேலும் 45 சந்தேகநபர்கள் கைது!

மே 9ஆம் திகதி காலி முகத்திடல் மற்றும் அலரி மாளிகை பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் மேலும் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது. இதன்படி, இதுவரை இந்த சம்பவம் தொடர்பில் 2,393 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# மட்டு. மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரங்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரின் பிரதான பொதுச்சந்தை கட்டிட தொகுதியில் புனரமைக்கப்பட்ட சந்தைத்தொகுதி நேற்று திறந்துவைக்கப்பட்டது.

இதுவரையில் பொதுச்சந்தையின் மேல்மாடி பகுதியில் இயங்கிவந்த மீன் சந்தை மற்றும் இறைச்சி கடைகள் பொதுச் சந்தையின் கீழ் பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

சந்தைக்குவரும் மக்களின் நன்மை கருதியும் வியாபாரிகளின் நன்மைகருதியும் இந்த நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாநகரசபை முன்னெடுத்துள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் குறித்த மீன்சந்தை கட்டிட தொகுதி புனரமைக்கப்பட்டு இன்று திறந்துவைக்கப்பட்டது. மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினர்கள், மாநகரசபையின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

பொதுச்சந்தைக்கு வரும் முதியவர்கள் மற்றும் நோயாளர்களின் நன்மை கருதியும் நீண்டகாலமான மீன்வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் மீன்வியாபாரிகளும் விடுத்தவேண்டுகோளின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை முதல்வர் இதன்போது தெரிவித்தார்.

வீதியோர வியாபாரங்களினால் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவான விபத்துகள் நடைபெறுவதாகவும் இதன் காரணமாக வீதியோர வியாபாரங்களை பெருமளவில் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் இதன்போது தெரிவித்தார்.

# 200 கோடி ரூபா முதலீட்டில் அலுமினிய உற்பத்தி ஆலை



மட்டக்களப்பில் இன்று திறந்து வைப்பு

மட்டக்களப்பு, ஜுன்.05

மட்டக்களப்பில் சுமார் 200 கோடி ரூபா முதலீட் டில் அலுமினிய உற்பத்திச்சாலை ஒன்று இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. கட்டங்களுக்கான பொருத்து வேலைகளுக்குப் பயன்படுத்தும் மூலப்பொருட் கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு உள்நாட்டுத் தேவைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதுடன் ஏற்றுமதியும் செய்யப்படவுள்ளது.

இத் தொழிற்சாலையினை மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பிரதம் அதிதியாகக் கலந்து கொண்டு திறந்து வைக்கவுள்ளார்.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இத்தெழிற்சாலை திறந்து வைக்கப்படுவதனூடாக மாவட்டத்திலுள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகள் 200 பேர் நேரடியாகவும் சுமார் 350 பேர் நேரில் தொழில்வாய்ப்பினையும் பெற்றுக் கொள்கின்றனர்.

நாடு தற்போது எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையில் பொதுமக்கள் தொழில் ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இத்தொழிற்சாலையானது ஆரம்பிக்கப்படுவதனால் இம்மாவட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதுடன், நாட்டினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கனிசமான பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தொழிற்சாலையானது ஜேர்மன், ஜப்பான், வியட்நாம் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி மீள் சுழற்சி முறையிலான உற்பத்திகளை உருவாக்குகின்றது. உள்நாட்டில் கிடைக்கப்பெறும் அலுமினிய பொருட்கள் மற்றும் புதிய மூலப்பொருட்களையும் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் திறன் படைத்த தொழிநுட்பம் இங்கு பயன் படுத்தப்படுகின்றது. இதனூடாக பூச்சி யக் கழிவு முகாமைத்துவம் இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றமை சிறப்பம் சமாகும்.

தொழிற்சாலைகளினால் ஏற்படும் பிரதான பாதிப்பகளான நீர் மாசடைதல், காற்று மாசடைதல் என்பவற்றினைத் தடுப்பதற்காக அதிநவீன காற்று மாசடைவதை தடுக்கும் முறைமை இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், நீர் சுத்திகரிப்பு முறைமையிலும் நவீன தொழிநுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மிகவிரைவில் இவ்வலுமனியம் தயாரிப்புகள் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படவுள்ளதாகவும் இதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்னும் கனிசமான பங்களிப்பினை வழங்கமுடியுமெனவும் அல்றா அலுமனியம் நிறுவனத்தின் தலைவர் ஏ.எம். ஊனைஸ் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

மேலும் மிகவிரைவில் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள திராய்மடு பிரதேசத்தில் உள்ளூர் வழங்களைக் கொண்டு தரை ஓடுகள் (மாபில்) தயாரிக்கும் தொழற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதனூடாக சுமார் இரண்டாயிரம் வேலை வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# படகில் அவுஸ்திரேலியாவுக்கு சென்றாரா எம்.பியின் மகன்?




கொழும்பு, ஜூன். 05

தெற்கு நெடுஞ் சாலையில் பொலிஸாருடன் வாக்கு வாதப் பட்டு, தற்போது பொலிஸாரால் தேடப் படும் ஒருவரான ஐக் கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெதஆராச்சியின் புதல்வர் தனது பேஸ்புக் பக்கத்தில் சர்ச்சைக்குரிய படமொன்றை பதிவேற்றியுள்ளார்.

“ஸ்ரீலங்கா பொலிஸாரே , நான் அவுஸ்திரேலியா வந்துள்ளேன்.இப்போது என்ன செய்வது ?” என்று இலங்கை பொலிஸாருக்கு சவால் விடுக்கும் வகையில் அதில் குறிப்பிட்டுள்ள அவர் ,தாம் இருக்குமிடத்தை அவுஸ்திரேலியா என பதிவிட்டுள்ளார்.

பொலிஸாரினால் தேடப்படும் ஒருவர் பொலிஸாருக்கே சவால் விடுத்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# 5 நாட்களும் ஆசிரியர்களை அழைப்பது சாத்தியமில்லை

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன். 05

**நாட்டில் தற்போதுள்ள சூழ் நிலையானது ஒட்டுமொத்தமாக வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாத நிலைமையாக உள்ளது. இந் நிலையில் பாடசாலைகளை வாரத் தில் ஐந்து நாட்களும் நடத்துவதென்பது பெரும் நெருக் கடியான விடயம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் இது தொடர்பாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளோம். அக் கடிதத்தில், தற்போதைய நெருக்கடியில் ஆசிரியர்கள் ஐந்து நாட்களும் பயணம் செய்து கற்பித்தல் பணியில் ஈடுபடுவது முடியாத காரியம்.

நாளுக்கு நாள் எரிபொருட்களின் விலைகள் அதிகரித்தபடியே உள்ளன. இந்நிலையில் ஒவ்வொரு நாளும் பயணம் செய்வதென்பது உழைப்பின் முழுத் தொகையையும் பயணத்துக்கு செலவழிக்க வேண்டியுள்ளது.

ஆசிரியர்களை முழு நாட்களும் அழைப்பதெனில் அவர்களின் போக்குவரத்து செலவீனத்தில் அரைப்பங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் மற்றைய திணைக்களங்களில் பின்பற்றப்படும் நடைமுறைகளுக்கு ஒத்ததாக பாடசாலைகளை இயக்குவதே சிறந்த வழியாகும்.

ஆசிரியர்களின் பாடநேரங்களை அதிகரித்து அவர்களை சுழற்சி முறையில் அழைப்பதே பொருத்தமானது. இதனை தாங்கள் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். இந்த நடைமுறையானது பாடசாலை அதிபரின் நிர்வாக நடைமுறைக்கு உட்பட்டதாக நெகிழ்ச்சிப் போக்குடையதாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சகல மார்கங்களையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

உணவுப்பஞ்சம், போக்குவரத்துக் கஷ்டம், அன்றாட வாழ்க்கைக்கான துயரம் என இவை அனைத்துமே மாணவர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த நாட்டில் உள்ள குழந்தைகளையும் பாதித்துள்ளது.

போதிய போசாக்கின்மையால் குழந்தைகளின் ஆரோக்கியம் கேள்விக்குறியாகியுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதனை மருத்துவத்துறையினர் எச்சரித்துள்ளனர். இது அபாயகரமானது என்பதால் மாணவர்களின் மதிய போசனம் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கான போசாக்கு உணவு பாடசாலைகளில் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 - 04 - 1933



மறைவு 01 - 06 - 2022

### கனகநாதன் செல்லத்துரை

யாழ். மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு, இந்தியா சென்னை, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகநாதன் செல்லத்துரை கடந்த 01-06-2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பராசக்தி, காலஞ்சென்ற சிவசக்தி, நாகேஸ்வரன், காலஞ்சென்ற அகிலசக்தி ஸ்ரீதயாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துர்க்காதேவி, காலஞ்சென்ற ஸ்ரீதயாளன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாக்கியநாதனின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அருந்ததி பாக்கியநாதன், சிவஞானசுந்தரம் கந்தையா, அன்னபூரணம் கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற அருள்வேந்தன் கேதீஸ்வரன் அவர்களின் அன்புப் பெரியப்பாவும், உமைவேந்தன், காலஞ்சென்ற அனுரங்கன், பூரணி, விஷ்ணவி, சாய்ந்தவி, அஷ்னவன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆதவன் அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**நாகேஸ்வரன் - மகன்**
**Mobile : +447862244312**
**பராசக்தி - மகள்**
**Mobile : +447428140503**
**வேந்தன் - பேரன்**
**Mobile : +447816524167**

தகவல்
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 02 - 1932



மறைவு 01 - 06 - 2022

### வேலுப்பிள்ளை இரத்தினம்

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இரத்தினம் அவர்கள் கடந்த 01-06-2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும்,காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், இராசையா, தனபாலசிங்கம், அருளய்யா, நடராசா, நல்லதம்பி, கதிராசிப்பிள்ளை, சின்னப்பிள்ளை, ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், குகனசபேசன், தயாளன், சுகுணா, ரேவதி, ஜெயரூபன், தர்மசீலன், சத்தியசீலன், கருணாகரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டியான்சயம்பா, சொரூபறயனி, இராஜேஸ்வரன், இராசகுலரத்தினம், ஜெயவாணி, அம்மணி, ராஜி, வினோதினி, மதுரா ஆகியோரின் அன்பு மாமனாரும், எலிசபத், பிறின்ஸி, வில்லியம்ஸி, மதுசா, மதுரா, மதுன், துவாரகன், நவநீதன், றொசான், றோகினி, றெனுசன், காவியன், பவிதன், தர்ஷ்னு, சைலன், சியஸ், சஞ்சயா, அஜய், ஆதிஸ், ரவன், தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05-06-2022) ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 09:00 மணிமுதல் ந.ப 12:00 மணிவரை நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**தயாளன் - மகன்**
**Mobile : +4915231089313**
**தர்மசீலன் - மகன்**
**Mobile : +491638675760**
**பிரபாகரன் - மகன்**
**Mobile : +94778764189**

தகவல்
**குடும்பத்தினர்**



# யாழ்.கோம்பயன் மணல் மயானத்தின் நுழைவாயில் நேற்றுத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 05

யாழ்.மாநகர சபையினதும் வண்ணை கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலன சபையினதும் மற்றும் நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்புடன் புதுப் பொலிவு பெற்ற யாழ்.கோம்பயன் மணல் இந்து மயானத்தின் நுழைவாயில், ஆலயக் கட்டடம், இரண்டு தகனமேடை, காவலாளி அறை என்பன நேற்று திறந்து வைக்கப்பட்டன.

நேற்று சனிக்கிழமை யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரன், வண்ணை கோம்பயன்மணல் இந்து மயான பரிபாலன சபையினர், நன்கொடையாளர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கோம்பயன் மணல் இந்து மயானத்தின் நுழைவாயில், ஆலயக் கட்டடம், தகனமேடை, காவலாளி அறை என்பனவும் விருந்தினர்களால் திறந்துவைக்கப்பட்டன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் எண்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் எண்ட் மூவி-அந்நியன்
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்



**இரவு**
07.00 மணி : SPOTLIGHT- தர்மலிங்கம்
சித்தார்தன் -நாடாளுமன்ற உறுப்பினர்



08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : டான் பட்டிமன்றம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை -மேல் மாகாண
சபை உறுப்பினர்-கொஸ்தா




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## சிவ ஒளி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு